REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம் — விய — சித்திரை உ௩, 5–5–'46 — ஞாயிறு | இதழ் 39

JAFFNA COLLEGE LIBRARY, MAY 20 1946, VADDUKODDAI, CEYLON

# இலங்கை இந்தியர் சீற்றம்

## மகாநாட்டிற் பொய்யுரைகள்

[நமது அரசியல் நிருபர்]

**மிருகங்களிலும் பார்க்கக் கேவலமாக இங்குள்ள இந்தியர்கள் கருதப்படுகின்றனர் என்ற புகாரைச் சமீபத்தில் நுவரேலியாவில் நிகழ்ந்த இலங்கை இந்தியர் மகாநாடு கிளம்பியிருக்கின்றது: பிரதி வருடமும் மகாநாடு கூடி இலங்கை மக்கள்மீது அபரமாகப் பழி சுமத்துவது இங்குள்ள இந்தியரின் சுபாவம்.**

இம்முறை நடைபெற்ற மகாநாட்டுக்குத் தலைமை வகித்த பிரமுகர் நெருப்பைக் கக்கியிருக்கின்றார். சித்திரவதை ஒன்றைத் தவிர மற்றும்படி இந்தியத் தொழிலாளர்கள் அடிமைகள் போலவே நடத்தப்படுகின்றனர். இவர்கள் வாயில்லாப் பூச்சிகள் என்றெல்லாம் வசைபுராணம் பாடியிருக்கின்றார். இலங்கை தென்னபிரிக்காபோல மாறிக் கொண்டு வருவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம் என மற்றுமோர் சொற்பொழிவாளர் முழக்கினர். பொய்யுரைகளும் ஆதார பூர்வமற்ற பேச்சுக்களும் இந்தியர்களுக்கு எவ்வித நலன்களையுங்கொண்டு வரமுடியாது. இலங்கை மக்களின் உள்ளங்களையெல்லாம் புண்படுத்திக் கசப்பை அதிகரிக்கச் செய்வதால் எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. தங்கள் கண்களைச் சொந்தக் கைகளால் இவர்கள் குத்திக் கொள்ளுகின்றனர் என்பதை மறந்து விடுகின்றனர். இலங்கையில் வதியும் இந்தியர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களைப் பெறுகின்றனர் என்பது பிரசித்தம். இந்தியாவிற் கிடையாத வசதிகளும் சௌகரியங்களும் இவர்களுக்கு இலங்கையில் உண்டு. ஒரு தோட்டத் தொழிலாளியையும் அவனுக்கு அயலில் வசிக்கும் சிங்களச் சகோதரன் ஒருவனின் வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியத் தொழிலாளி ஒருபடி மேல் என்பது விளங்கும். உண்ண உணவும், வசிக்க நல்ல இல்லங்களும் இவர்களுக்கு உதவப்படுகின்றன. பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதற்கான ஒழுங்குகளுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகக் கூறினல் இங்குள்ள இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை உயர்வாகவே காணப்படுகின்றது. சொந்தநாட்டு மக்களுக்குக் கிடையாத சுகாதார வசதிகள் கூட இவர்களுக்கு உதவப்பட்டிருக்கும் போது இங்குள்ள இந்தியர்கள் அடிமைகளாக வீருக்கின்றனர் என அலறிப் புடைப்பது முதல்தரமான அரசியற் பித்தலாட்டமாகும்.

தோட்டங்களில் வதியும் மக்களின ஜனன விகிதம் மெச்சத்தக்கதாகவிருப்பதோடு மாணவிகிதமுங் குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள இந்தியர்களின் நிலைமையை இந்தியத் தலைவர்கள் போன்ற ஜவஹர்லால்நேரு, ராஜாஜி போன்றவர்கள் நேருக்கு நேரே கண்டிருக்கும்போது எத்தனை போலித் தலைவர்கள் மேடைமீது ஏறிக் கதறித்தள்ளினலும் அதை ஒருவருங் காதிற் போட்டுக்கொள்ளப் போவதில்லை.

இந்தியத் தலைவர்களின் நேர்மையான அனுதாபத்தையும் சீமைச் சாமிகளின் தயையையும் விரும்பினல் இங்குள்ள இந்தியர் தலைவர்கள் அசட்டுத்தனமாக நடக்கவும் மாட்டார்கள்; பொறுப்பற்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கவும் மாட்டார்கள். மிகுந்த ஆராய்வுடனேயே பேசியிருப்பார்கள்.

இனி, இங்குள்ள இந்தியர்களின் அரசியல் அந்தஸ்தைப் பற்றி ஆராய்வோம். தலைவர் தொண்டமான் கூற்றின்படி இங்குள்ள இந்தியர்களில் 80 சதவிகிதம் இலங்கையைச் சொந்தமாக்கியிருக்கின்றனர்? மிகவும் நல்லது. இப்படி இலங்கை மண்ணில் இவர்கள் இறக்கத் தயாரென்றால் இவர்களுக்குச் சகல உரிமையையும் இலங்கை உதவத் தவறாது. இலங்கை மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை இந்தியத் தொழிலாளர்களும் பெறவிரும்பினல் இவர்கள் இலங்கையைச் சொந்த நாடாகக் கருதவேண்டும். இங்குள்ள மக்களுடன் நிரந்தரமாகவாழவேண்டும். இதைத்தான் சென்னையிலிருந்து மகாநாட்டுக்கு வந்த ஸ்ரீமதி அம்முசுவாமிநாதனும் அழுத்தியழுத்திக் கூறியிருக்கின்றார். அப்படியன்றிக் கூழும் அருந்தவேண்டும் முறுக்கான மீசையுந் தாங்கவேண்டுமென இந்தியர்கள் வாதாடுவது தர்மமாகாது. இந்தியாவிலும் இலங்கையிலும் பிரஜா உரிமை இவர்களுக்குக் கிடைப்பதாகில் இவர் இரண்டு தோணிகளிற் கால்களை வைத்து அவஸ்தைக்குள் மாட்டிக் கொள்ளுவார்கள்! "இந்தியர்கள் என்பதை மறந்து, இலங்கைமக்கள் என்பதை உணர்ந்து இலங்கையின் வளர்ச்சிக்கு உழைப்பதற்கு இந்தியர்கள் தயாராகிக் கொள்ளவேண்டும் என ஸ்ரீமதி அம்முசுவாமினதன் தமது சகோதர சகோதரிகளுக்கு வற்புறுத்தியிருப்பதை இங்குள்ள இந்தியர்கள் ஊன்றி உணர்வார்களாக.

இந்தியர்களின் அரசியல் அந்தஸ்து சீரானமுறையில் நிர்ணயிக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனல் இங்குள்ள இந்தியர்கள் இலங்கையைச் சதாசுரண்டுவதுடன் சகல உரிமைகளும் வேண்டுமென வாதாடுவதும் அதர்மமாகும். இவர்களின் நீதியற்ற கோரிக்கைகளையெல்லாம் நேருஜி பலமாகக் கண்டித்திருக்கின்றார். அப்படியிருந்தும் பிரதி வருடமும் இங்குள்ள இந்தியர்கள் கூட்டங் கூடி வானத்தை வில்லாக வளைக்க முயலுகின்றனர். இந்தியத்தலைவர்களின் புத்திமதிகளைச் செவிமடுக்க மறுக்கும் இந்தியர்கள் இலங்கையின் வளர்ச்சியிற் சிறிதளவும் அக்கறையற்றவர்கள் என்பது உண்மை. இவர்கள் இலங்கையின் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையிடுகின்றனர். நாட்டின் பொருளாதார நிலையைத் தளரச்செய்து நாட்டைக் குட்டிச் சுவராக்கக் கச்சை [illegible] றனர் என்று கொள்வதா, என்ன? இந்தியா சுதந்திரம் விரைவில் அடையப்போகின்றது. இலங்கையும் புதிய அரசியலுடன் விடுதலையடையப் போவதாகக் கேள்வி. ஆகவே, இருநாட்டுத் தலைவர்களுங் கூடி ஆலோசனைகள் நிகழ்த்தி இந்தியப் பிரச்சினையைக் கௌரவமான முறையிலே தீர்த்து வைப்பார்களென்த் தீர்க்கமாக நம்பலாம். இதற்கிடையில் இங்குள்ள இந்தியத் தலைவர்கள் பொய்யுரைகள் புனைந்து மக்களின் உள்ளங்களைப் புண்படுத்தாமல் தூரதிருஷ்டியுடன் அரசியல் விஷயங்களில் ஈடுபடவேண்டும்.

### யாழ்ப்பாணமே ஜாக்கிரதை!

இலங்கை இந்தியரின் மகாநாட்டுக்கு இந்தியாவினின்றும் வரவழைக்கப் பட்டவர்களில் ஸ்ரீ ஹலாவியம் என்பவரும் ஒருவர். இவர் இங்குள்ள இந்தியர்களுக்கு உபதேசம் செய்வதுடன் நில்லாது யாழ்ப்பாணத் தமிழர்களையும் தங்களுடன் ஒன்றுசேர்ந்து யுத்தம் புரியும்படி வேண்டுகின்றார். இலங்கை இந்தியர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமாம்! ஸ்ரீ பொன்னம்பலம் இந்தியர்களுக்காகச் சீமை சென்று பரிந்து பேசினர். தனது சகாக்களையும் அவர்களுடன் சேர்த்து அரசியல் உரிமைகளுக்காக வாதாடினர். இலங்கைத் தமிழர் காங்கிரஸில் இந்தியர்களுக்கும் அங்கத்துவங் கொடுத்தார். சீமை சென்றபொழுது தமது ஸ்தானத்தில் இந்தியப் பிரமுகர் ஸ்ரீ ஐ. எக்ஸ். பெரோரா என்பவரைத் தூக்கிவைத்துவிட்டுச் சென்றார். இத்தனை திருக்கூத்துகளும் யாழ்ப்பாணத் தமிழர்களின் முன்னேற்றத்துக்குப் பங்கம்விளைத்திருப்பதை இப்போது ஸ்ரீ ஜி. ஜி. உணர்ந்திருப்பார். இந்த அழகில் ஸ்ரீ ஹலாவியம் யாழ்ப்பாணத்தமிழர்களை இந்தியத்தமிழருடன் சேர்த்து ஓர் அரசியல் முன்னணியை ஏற்படுத்த முயல்வது சொந்த நன்மையைக் கருதியேதான். யாழ்ப்பாணத்தின் வளர்ச்சியையோ இலங்கையின் முற்போக்கையோ குறித்தல்ல. பெரும்பான்மையினரான சிங்களரைச் சிறுபான்மையினராக்கும் தந்திர முயற்சி இது. இந்த வார்த்தையைக் கேட்டு யாழ்ப்பாணத்தவர்கள் ஏமாறக் கூடாது. இலங்கைத்தமிழர்கள் அந்நியர்களல்ல. அவர்கள் இலங்கை மக்கள். சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையாகக் கௌரவத்துடன் வாழ்பவர்கள் தாம் கெடுவதுமன்றிப் பிறரையுங் கெடுத்துவிடுவதற்குச் சுயநலப்புலிகள் செய்யும் சூழ்ச்சிகளுக்குள் மாட்டிக்கொள்ளக் கூடாது. யாழ்ப்பாணமே ஜாக்கிரதை!

### பிரிட்டனின் அழைப்பு

இந்த செப்டம்பர் மாதத்தில் பிரிட்டனில் நிகழவிருக்கும் சர்வதேச வியாபார மகாநாட்டிற் கலந்து கொள்வதற்கு இலங்கைக்கும் அழைப்பு வந்திருக்கின்றது. இதற்கு முன்னதாக நிகழவிருக்கும் சாம்ராச்சிய மகாநாட்டிலும் இலங்கை பங்குபெற வேண்டுமென்பது குடியேற்ற நாட்டு மந்திரியின் விருப்பு. இம்மகாநாட்டிற் பல குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளுங் கலந்து கொள்வார்கள். இலங்கையின்

இந்த இரு மகாநாடுகளும் லண்டனில் குறைந்தது ஐந்து மாதங்களுக்காகிலும் நடைபெறும். ஆகவே, இலங்கைப் பிரதிநிதியாக யாரை, அனுப்பலாம் என்ற விஷயம் மந்திரிகளின் மூளைகளை அரிக்கத் தொடங்கிவிட்டது. இத்தகைய சர்வதேச மகாநாடுகளிற் பங்குபற்றும் பாக்கியம் இலங்கைக்கு இம்முறைதான் கிடைத்திருக்கின்றது.

### சென்னை மந்திரிசபை

சென்னையிற் கடந்த வாரத்துடன் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சி ஒழிந்து காங்கிரஸ் ஆட்சி ஆரம்பமாகியிருக்கின்றது. பிரதமமந்திரி ஸ்ரீ பிரகாசம் உட்பட ஏனைய மந்திரிகளான ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி ஸ்ரீமான்கள் கிரி, பக்தவத்சலம், அவினசிலிங்கம், பாஷ்யம், குமாரசாமி, டானியல் தோமாஸ், காந்த், கோட்டி ரெட்டி, வேமுலா கூர்மையா, குமாரசாமிராசா ஆதியோர்விசுவாசப்பிரமாணஞ்செய்து பதவி யேற்றுக்கொண்டனர். இன்னும் இருமந்திரிகள் இடம் பெறுவார்கள். ஆகவே, 1939-ம் ஆண்டு ஒக்டோபர் மாதக்கடைசியிற் பிறப்பிக்கப்பட்டு உயிர்பெற்ற 'செக்ஷன்' 93 ஆட்சிக்கு உலை வைத்தாயிற்று.

பதவிஏற்ற காங்கிரஸ் மந்திரி சபைக்குப் பொறுப்புள்ள வேலைகள் அதிகம் இருக்கின்றன. இவற்றுள் உணவுப் பிரச்சினை மிகமுக்கியமானது. எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்துள்ள தமிழ்நாட்டுக் காங்கிரஸ் உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டைப் பஞ்சத்தினின்றுங் காப்பாற்றத் தீவிரமுயற்சிகள்செய்தல் அவசியம். அடுத்ததாகச் சிறையில் வாடிவதங்கும் அரசியற் கைதிகளை விடுதலைசெய்து இந்திய மக்களின் கௌரவத்தையும் நன்மதிப்பையும் பெறவேண்டும்.

### தாய்நாட்டில் நேதாஜி

சீனத்தில் அல்லது ருஷியாவில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இருப்பதாகக் கேள்வி. ஆனல் பட்னுவிலிருந்து சுமார் அறுபது மைலுக்கு அப்பாலிருக்கும் நாலந்தா என்ற இடத்தில் ஒரு தொழிலாளி சில நாட்களுக்குமுன் அவரைக் கண்டதாகக் கூறப்படுகின்றது.

பண்டைக்காலத்தில் புத்தமத சர்வகலாசாலைகளுக்கு இருப்பிடமாக நாலந்தா திகழ்ந்தது. இங்கு மூன்ருவது வகுப்பு வண்டியிலிருந்து இறங்கிய நேதாஜி போஸ், புகைதா ஸ்தானத்தை விரைவாகக் கடந்து வயல்களிற் புகுந்துவிட்டாரென பரேமன் பஸ்லான் என்ற தொழிலாளி பத்திரிகை நிருபர் ஒருவரிடந் தெரிவித்தார். ஸ்ரீ போஸ் மீசை வளர்த்திருந்த போதிலும் அவருடைய முகச்சாடையில் எவ்வித வித்தியாசமுமிருக்கவில்லையென்றும், காக்கி உடை அணிந்திருந்தார் என்றுந் தெரிகின்றது.

நேதாஜி போஸ் சாயங்கால வேளையில் இருட்டுக்கட்டும்போது ஒரு வயலில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட பரேமன், "தாங்கள் பாட்னுவுக்குப் போகின்றீர்களா?" என்று கேட்டதற்கு, "நான் சில நாட்களுக்குப் பின்னர்தான் அங்கு செல்வேன்" என்று புன்முறுவலுடன் ஸ்ரீ போஸ் ஹிந்தியில் விடையிறுத்தார். தன்னைத் தனியே விட்டு விடும்படியுங் கேட்டுக்கொண்டார்.

நலாந்தா புகைரத ஸ்தானத்திலிருந்தவர்களின் கண்களுக்குப் படாமல் ஸ்ரீ போஸ் வெளியே வந்தது மர்மமாகவேயிருக்கின்றது.

அடுத்து நிகழவிருக்கும் இந்தியத் தேசியக் காங்கிரஸின் தலைவர் தெரிவுக்கு நேதாஜி போஸின் பெயரும் ஏனைய தலைவர்களுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

## பழைய நாடகம்

திருவாங்கூர் — அரசு

சீமைத்துரைகள் வந்தும் — விடுதலைச்
    செய்தியைக் காண்கிலமே
ஊமைக்கதை தானே — மனதில்
    உள்ளதைக் கூருரோ?

மூட்டைமுடிச் சுடனே — துரைகள்
    மூன்றுபேர் வந்தபின்னும்
ஏட்டை அவிழ்ப்பதற்காய் — அவர்கள்
    ஏங்கித் தவிப்பதுமேன்?

பண்டைய நாடகத்தைப் — பின்னும்
    பாசாங்குடன் நடிக்க
வண்ட வாளங்களுடன் — இங்கே
    வாதிக்க வந்தாரோ?

ஆட்லித்துரை மொழியை — அங்கே
    ஆற்றினில் விட்டாரோ?
நாட்டினின் கொந்தளிப்பை — உணர
    நாட்ட மில்லாததுமேன்?

இந்து முஸ்லீம்வாதம் — என்றும்
    இனியதோர் தின்பண்டமோ?
சிந்துங் கண்ணீரதுதான் — அவர்கள்
    சிந்தையிற் காணுததேன்?

தேசத்தைத் துண்டாடி — ஒருசில
    தேவதைக் கர்ப்பணித்தால்
நாசத்துக்கே வழியாம் — அதனல்
    நன்மை எதுவுமில்லை.

வெள்ளைய ராட்சியிலே — இந்த
    வாதமும் தீராததே
உள்ள தறிந்தபின்னும் — மறைத்து
    உரைப்பதும் விந்தையதே.

ஆயிரந் திட்டங்களைக் — கேட்டு
    அலுத்தது இந்நாடு
பாயிரங் கேட்குமுன்னே — பழைய
    பல்லவி தோன்றுதய்யா.

பூரண சுதந்திரமே — தவிர
    பொம்மைத்திட்டம் எதற்கோ?
ஆரண அன்னையவள் — மகிழ
    அடிமைத்தளை ஒழிப்பீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● சிவகோடிக ளெல்லாவற்றி ற்கும் காலம் வரையறுக்கப்பட்டிருக்கின்றதாம்.

☼ இது கடவுளின் சிருஷ்டியாம்.

☼ தபோ வலிமையால் இவ்வரையறையைத் தாண்டி விடுகின்றுனும் மனிதன்,

☼ இது மிக மிக அபூர்வமான சம்பவமாம்.

☼ மனித சிருஷ்டியில் இப்படி நிகழ்ந்து விட்டால் ஏன் ஆத்திரப்பட வேண்டுமாம்.

☼ அரசாங்க சபையின் கால நீடிப்பால் அநேகருக்கு வயிறு பகிரென்றதாம்.

☼ இதனையே கதியென்று நம்பியிருந்தவர்க்கு வயிறு 'ஜில்' என்றதாம்.

● இப்படியாக வயிற்றுக் கோளாறுகளின் காலத்தையும் நீடித்து விடலாகாதாம்.

☼ அதனுலேதான் அடுத்த வருடத்தோடே அரசாங்கசபை குலைந்துவிடுமாம்.

☼ இதனைக் கேள்விப்பட்டதும் அனேகர் குரைக்க வெளி வந்துவிட்டார்களாம்.

☼ குரைப்பதில் என்ன பயனென்று சிலர் 'ஜம்' என்றிருக்கின்றுர்களாம்.

☼ ஆனுல் வேஷம் போடுபவர்கள் இன்னுஞ் சில நாளில் அரங்கில் வருவார்களாம்.

☼ அரை டசினுக்கு குறையாத வேஷதாரிகள் ஒவ்வொரு அரங்கிலும் ஆடுவார்களாம்.

● வேஷதாரிகளைக் கண்டு மக்கள் மயங்கிவிடக் கூடாதாம்.

☼ வேஷம் போடுபவர்கள் எல்லாரும் நடிக்கமாட்டார்களாம்.

☼ நடிக்க மாட்டாதவர்கள் 'அண்ணவி' மாரைத் தேடியலைகின்றுராம்.

☼ இவர்கள்தாமும் காட்டாண்மைக்காரர்.

☼ சாயம் வெளிறிவரும் இக்காலத்தில் இவர்களை நம்பி இறங்கக் கூடாதாம்,

● யாழ்ப்பாணப்பட்டின மின்சாரமும் வெளிறி வருகின்றதாம்.

☼ இந்த வியாதி பலகாலமாக ஆரம்பமாகியிருந்ததாம்.

☼ நிலாக்காலத்தில் வெளிச்சமும் இருட்டுக்காலத்தில் இருட்டுமாக்கிவிடுமாம்.

☼ இந்தக்கோளாற்றைத் தடுக்க வழிதெரியாது தடுமாறுகின்றனராம் பட்டினசங்கத்தினர்.

☼ மின்சாரசக்தி வினியோகத்திலும் கட்டுப்பாடு செய்துள்ளனராம்.

☼ படமாளிகைகளுக்கும் சக்தி குறைக்கப்பட்டதால் ஓரேகாட்சிதானும்.

☼ இதனுற் கமலா 'சேர்க்கஸ்'க்காரருக்கு அடிக்கிறதாம் யோகம்.




மேலதிகமாக வண்ணான் கிழித்தான்!


— ஆடைகள் மிகவும் ஒறுப்பனவாயிருக்கும்போது

இந்நாட்களிலிருக்கும் கொள்ளை விலையில் வண்ணான் உங்கள் ஆடைகளைக் கந்தையாக்க விடமுடியாது. அவைகளைச் சுத்தப்படுத்துவதற்குக் கிழிந்துபோகக் கூடாத முறையைக் கண்டுபிடிக்கவேண்டும். 'சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை'யை ஆரம்பிப்பதற்கு இதுதான் சமயம். இவ்விதம் மிருதுவான முறையில் ஆடைகளைத் தோய்ப்பது வண்ணானின் முறையிலும் எவ்வளவோ மேலானது. இது மிகவுஞ் சுலபமானது; ஆடைகளை மிகவுஞ் சுத்தமாகத் தோய்த்துவிடுகிறது; ஒரு நூலிழைதானும் கெட்டுப்போகமாட்டாது. உங்களுடைய வேலைக்காரனுக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை விளக்கிக் கூறவும்.

**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்ருக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக—சன்லைட்டை நன்ருகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல் வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது
4. நன்ருக அலசிக் கழுவவும். அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறபடியால் அலசிக் கழுவிவிடவும். நன்ருக அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்.




சன்லைட் சோப்

ஆடைகளைப் பாதுகாக்கின்றது

S. 72-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED


மலாய அன்பர்களுக்கு—IX "சுயா"

# கப்பல் வந்துவிட்டது

நீண்டகாலமாக உங்களுக்குக் கட்டுரை எழுதாமல் விட்டுவிட்ட நான், உங்கள் சீமையிலிருந்து, கப்பல் புறப்பட்டு, எங்கள் தேசக் கரை பிடித்துவிட்ட பிறகுங்கூட, ஏதும் எழுதாமல்விட்டு விடுவதா என்று எண்ணிக்கொண்டு இதை உங்களுக்கு எழுதுகின்றேன். இவ்வளவு நாட்களாக உங்களுக்கு ஏதும் எழுதாமல் விட்டுவிட்டதெல்லாம்பயத்தினுலேதான். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது என்பார்களே, அது போல, உங்கள் பந்துமித்திரர்கள் கூட அறிவிக்காத சங்கதிகளையெல்லாம், உங்களுக்கு அறிவித்துக்கொண்டு வருகின்றேனே யென்றும், நீங்கள் இலங்கைக்கு வரும் காலங்களில், 'சுயா' வாகிய எனக்கு, ஏதும் சந்தோஷம் செய்வீர்களேயென்றும் காத்துக் கிடந்த எனக்கு, என் கட்டுரைகளிலே தப்புத் தண்டக்கண்டு உங்களிற் சிலர், என்மேற் சீறி விழுந்து, பத்திரிகாலயத்துக்குக் கடிதம் எழுதியிருக்கின்றீர்களென்று அறியும்போது பயம் வராதா என்ன! ஐயாமார்களே! நான் எனது கட்டுரைகளில். உங்களில் யாரையாவது, வேண்டுமென்றே நோகச் செய்ய விரும்பி எதையும் எழுதிவிடவில்லை யென்பதைத் தங்களுக்கு அதிக வணக்கத்தோடு அறிவிக்கின்றேன்.

நாசமாய்ப்போன யப்பானியனின் குண்டுமாரிக்கும், அவன் கொடுமைகளுக்கும், நோய் நொடிகளுக்கும், பஞ்சம் பசிக்கும், தப்பிப் பிழைத்த நம்மவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட, முதற் கப்பல் இலங்கையை வந்தடைந்து விட்டது. எல்லாரும் மூட்டை முடிச்சுகளுடனும், குஞ்சு குழந்தைகளுடனும், தங்கள தங்கள் இல்லங்களை நோக்கி ஆவலோடு பறந்துகொண்டிருக்கின்றனர். மலாயாவிலிருந்து கப்பல் புறப்பட்டுவிட்டது என்று கேள்விப்பட்டதுமே கொழும்புப் பட்டினத்துக்கு ஓடோடியும் போய் தங்களாட்களைச் சந்திப்பதற்காக நாட்கணக்காகக் காவல் கிடந்தவர்கள் பலர். ஒருவரையொருவர் கண்டபோது, எவ்வளவு மனங் கரையக்கூடிய உருக்கமான காட்சியாய் இருந்திருக்குமென்று எண்ணுகின்றீர்கள். செத்தவர் பிழைத்தார் என்றுல் எவ்வளவு ஆநந்தமுண்டாகுமோ அவ்வளவு ஆநந்தமுண்டாகாதா இங்குள்ளவர்களுக்கு? நீங்கள் எல்லோரும் இங்குள்ளவர்களால் இழந்துவிடப்பட்டவர்களாக எண்ணப்பட்டவர்கள்தானே.

ஆயிரத்து ஐந்நூறு பெயர்கள் வந்து சேர்ந்தார்கள் என்கிறுர்கள் சிலர். இல்லை அதிலும் கூட என்கிறுர்கள் வேறு சிலர். தொகையளவில் எப்படிப்போனுலும் போகட்டும், ஏதோ கொஞ்சப் பெயராவது வந்து சேர்ந்து இங்குள்ளவர்களின் கவலையை நீக்கிவிட்டார்களே அவ்வளவாவது போதாதா என்று கேட்கின்றேன் நான். ஆனுல் வந்து சேர்ந்த சிலர் சொல்லும் மாதிரியிலிருந்தும், முன் உங்களில் ஒருவர் எழுதிய மாதிரியிலிருந்தும், 'இங்கே பெண்களைக் கட்டிக் காத்து வைத்திருந்தவர்களுக்கெல்லாம் உங்கள் வாலிபப் பிள்ளைகள் அட்சதை போட்டுவிட்டார்கள் போலிருக்கின்றதே! இது நியாயமா?

இங்கே வந்து சேர்ந்தவர்களுக்கு நடக்கும் மட்டு மரியாதைகளைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும் போங்கள்! எங்களூர்ப் பஸ் கொம்பனிகாரருக்கே வந்து சேர்ந்தவர்களை அவரவர் வீடுகளுக்கு இனுமாகக் கொண்டுபோய் விட்டுவரக் கூடிய இரக்கம் பிறந்துவிட்டதென்றுல், இனி இந்தக் கலிகாலத்தில் வேறென்னதான் நடவாது போகும்? மலடி கருவுயிர்க்காளா? பகலில் வெள்ளி தோன்ருதா? பசுவும் புலியும் ஓர் துறையில் நீரருந்தாவா? சமுத்திரம் நன்னீராகாதா? பஸ் கொம்பனிக்காரரே இப்படி யென்றுல் அவரவர்கள் வீடுகளில் [illegible] நான் எதையெதை யென்று சொல்லுவது. "என்னுடைய அவருக்குத் தின்னைவேலிப் புகையிலை தான் பிடிக்கும். என்னுடைய அவர் மெத்தையில்லாமல் நித்திரை செய்யமாட்டார். என்னுடைய அவர் சாப்பாட்டுக்குப்பின் பால் குடிப்பது வழக்கம்" என்று சொல்லிச் சொல்லித் தங்கள் புருஷர்களுக்கு வேண்டுவன சேகரித்து வைத்திருக்கும் பெண்கள் எத்தனை பெயர்! "என்னுடையமருமகனுக்குப் பலாப்பழம் என்றுல் உயிர்" "என்னுடைய மருமகன் நெல்லரிசிச் சோறல்லாமல் வேறென்றையும் தொட்டுக்கூடப்பாரார்" "என்னுடைய மருமகன் கொஞ்சந்தான் சாப்பிடுவார்; ஆனுல் அவ்வளவும் தங்கமாயிருக்கவேண்டும்" என்றிப்படி யெல்லாம் தங்கள் தங்கள் மருகப்பிள்ளைகளின் வீரப்பிரதாபங்களைச் சொல்லிச் சொல்லி அவர்களுக்கு வேண்டுவனவற்றைச் சேகரித்து வைத்திருக்கும் மாமி, மாமன் தான் எத்தனை பெயர்! "என் குழந்தை இரண்டு தலையணையில்லாமற் சயனிக்கமாட்டான் என் குழந்தை பீங்கான் கோப்பையிலன்றி வேறெதிலும் சாப்பிடமாட்டான்" என்று சொல்லிச் சொல்லித் தம் தம் குழந்தைகளுக்கு வேண்டுவனவற்றைத் தேடி வைத்திருக்கும் அன்னை தந்தையர்தான் எத்தனை பெயர்! இவ்வளவோடு நின்றுவிட்டாற் போதாதா? வருகிறவர்கள் கைகோணுமற் செலவு செய்வதற்கு ஈடு நோட்டு எழுதிப் பணங்கூட அநேகர் எடுத்து வைத்திருக்கின்றுர்களே! அப்புறம் அவர்களுக்கு என்னதான் குறைவுவரும் இங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்!

இனி இங்கே வந்து சேர்ந்தவர்களுக்குப் பொழுது எப்படித்தான் கழியப் போகின்றதோ என்று எண்ணுவீர்களாக்கும். அட தெய்வமே அதற்குத்தானு இங்கே பஞ்சம்! 'சத்துராதி வீட்டுக்குடியைப் பிச்சையெடுத்துக் கெடு' என்ற மாதிரிக் கொஞ்சங் கொஞ்சமாகப் பொதுமக்களைச் சுரண்டிக்கொண்டிருக்கும் சினிமாத் தியேட்டர்கள் எங்கே போய்விட்டன? கொள்ளையடிப்பதென்றுல் இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகவா அடிப்பது; அடிப்பதை ஆனபடி ஒரே முறையில் அடித்துவிட்டுப் பின் காலை நீட்டிக்கொண்டிருந்து குக்ஷியாகப் பொழுது போக்க வேண்டாமா; அந்த வித்தையை நான் உனக்கே கற்றுக் கொடுக்கின்றேன் என்பது சினிமாத்தியேட்டர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவந்த வாத்தியாரைப்போல, "கமலா சர்க்கஸ்" என்ற ஒரு கம்பனி புதிதாக வந்து தினமும் பதினுயிரக்கணக்கில் வாரிச் சுருட்டுகின்றது. கொஞ்ச நஞ்சம் நீ ஏதும் மக்களிடத்தில் மிஞ்ச விட்டுவிட்டுப் போய்விட்டால் நான் ஒரு கை பார்த்து விடுகின்றேன் என்று கமலா சர்க்கஸ் கம்பனிக்கு ஆறுதல் சொல்லி வழியனுப்புவதுபோலக் "கார்ணிவல்" என்ற ஒன்றும் வரவிருக்கின்றது. இவ்வளவும் போதாதா உங்களாட்களுக்குப் பொழுது போக்குவதற்கு? போதாவிட்டால் இன்னுமொன்று சொல்லுகிறேன். கேளுங்கள். இங்கேயெல்லாம் கோவில்களில் விழாக்காலம் தொடங்கி விட்டது. ஒன்றுமில்லாதவகையாக இந்த வருஷம், "இந்தியாவிலிருந்து நாட்டியக் காரிகளை (சின்னமேளம்) ப் போதியஅளவுக்குக் கொண்டுவந்து இங்கே மூலைமுடுக்குகளிலெல்லாம் வைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவிலே, பட்டிக் காடுகளிலே, நேரப்பொழுதைப் போக்குவதற்குக் கூடத் திண்டாடிக் கொண்டுகிடந்த, கொஞ்சம் காலைக் கையை ஆட்டவும், கண்ணைச் சிமிட்டவும் மாத்திரம் தெரிந்த சிறுக்கிகளை இங்கே கொண்டுவந்து வைத்துக் கொண்டு அவர்கள் படும்பாடென்ன? அந்தச் சிறுக்கிகளுக்கு நடக்கும் பவிசென்ன? எங்கேனும் கோயிலில் காலைக் கையை ஆட்ட அவர்களை அமர்த்திவிட்டால், அவர்களைக் கொண்டுவந்து வைத்திருப்பவர்கள், பக்கத்திலிருந்து புதுமாட்டுப் பெண்ணை அழைத்துப் போகும் புதுமாப்பிள்ளையைப் போல அவர்கள் பக்கத்திலமர்ந்துகொண்டு போகும் காட்சியைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிப்புவரும். கோவில்களிலே அவர்களின் முன்னிலையில் தங்கள் தங்கள் நடப்பைக் காட்டத் தெண்டிக்கும் வாலிபப் பிள்ளைகளின் கோலத்தைப் பார்க்கவாவது ஒரு முறை கட்டாயம் விழாப்பார்க்கப் போக வேண்டுமென்று நீங்கள் விரும்பாமலிருக்கமாட்டீர்கள். இப்பொழுது இங்கே ஒரு கோவிலில் விழாவென்றுல் பத்துப் பன்னிரண்டு சின்னமேளக் கூட்டமென்ன, பெரிய மேளக் கூட்டமென்ன, எல்லாம் பெரும் அமர்க்களம் - பணம் தண்ணீர் பட்டபாடுபடுகின்றது. ஆகையாற் கடசி இந்த விழாக்களைப் போய்ப் பார்த்தாவது உங்களாட்கள் பொழுது போக்கலாம் தானே!

கடசியாகச் சொல்லுகின்றேன் மாமியார் வீட்டில் புதுமாப்பிள்ளைக்கு நடந்த நடப்பு நடக்கின்றது, மலாயாவிலிருந்து இங்கே வந்து சேர்ந்த உங்கள் ஆட்களுக்கு, முன்னுட்களில் மலாயாவிலிருந்து ஒருவர் வந்துவிட்டாரென்றுல் அவரைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அவரிடம் போய் "எனக்கென்ன கொண்டு வந்தாய்"? "எனக்கென்ன கொண்டுவந்தாய்?" என்று அவரை நச்சரித்தகாலம் மாறிவிட்டது. இப்பொழுதோ அவரின் பந்துக்களும் நண்பர்களும் அவருக்கு வேண்டுவன கொண்டுபோய்க் கொடுக்கும் காலமாய்விட்டது. இந்தக்காலம் கூட நெடுக நிலைத்திருக்குமென்று நம்பியிருந்து ஏமாந்து போகவேண்டாமென்று நான் உங்களுக்குச் சொல்லி வைக்கின்றேன். வந்தவர்கள் போக வராதவர்களின் ஆட்களும் தங்களாட்களைக்கண்டு களிப்பதற்காகத் தவியாய்த் தவிக்கின்றுர்கள். இங்கே ஏதோ நீங்களும் ஒருமுறை வந்துவிட்டுப் போங்களேன். அதினுலென்ன கெட்டுப்போய்விடும் உங்களுக்கு?

## புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

27-3-46-ந் திகதியைக்கொண்ட 226-ம் இலக்க அறிவித்தலை வியாபாரிகள் அவதானிக்கும்படி கேட்கப்படுகின்றனர். பங்கீட்டு அலுவலகத்தில் பிரத்தியேக கூப்பன்களை ஒப்படைத்து இதுவரை அவற்றிற்குப் பதிற் கூப்பன்கள் பெருதோர் தாமதமின்றி அவற்றைப் பெற்றுக்கொள்வார்களாக. கொழும்பு நகரம், கொழும்புக்கோட்டகம் (டிஸ்திரிக்) களுத்துறைக் கோட்டகம் ஆகியவைகளிலுள்ள வியாபாரிகள் ஹவலொக் வீதி 106-வது இலக்க இல்லத்திலுள்ள தலைமை அலுவலகத்திலும் ஏனைய வியாபாரிகள் தத்தம் பகுதிக்குச் சேர்ந்த புடவைக் கட்டுப்பாட்டு உதவி அதிகாரிகளின் கந்தோர்களிலும் மேற்படி கூப்பன்களைப்பெற்றுக் கொள்ளலாம். மேற்படி கூப்பன்களை 1946-ம் ஆண்டு மே மாதம் 4-ந் திகதி வரையும் மாற்றலாம். அதன் பின்பு செய்யும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 25-4-46
[2743]

## 233-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ந் திகதி துவக்கம் எல்லா இறக்குமதியாளரும் எல்லாக் கூப்பன்களையும் கூப்பன்களுக்குச் சமனுன உறுதி உரைப் பத்திரங்களையும் கொழும்பிலுள்ள இறக்குமதியாளராஞல் கிழமை தோறும், வெளி ஊரிலுள்ளவர்கள் இரண்டுகிழமைக்கு ஒரு முறையுங் கூப்பன் வைப்பகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 26-4-1946. [2745]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

# இராம இராச்சியம்

> இராம இராச்சியத்திற் சதிபதிகளும் சகோதரர்களும் எவ்வாறு வாழ்ந்தனர் என்பது இவ்வாரம் சிறிதளவு ஆராயப்பட்டிருக்கின்றது

## சதிபதிகள்

சொ. முருகப்பா

இராம இராஜ்யத்தில் சதிபதிகள்—கணவன் மனைவியர்—எப்படி இருந்தார்கள் என்பது நோக்கத்தக்கதுதான். கம்பர் காட்டும் சதிபதிகள் மிக மிகச் சிலரே யாவர். அவர்களைப் பற்றிக் கூறப்படுவதும் சிற்சில காட்சிகளில் தான். நாமும் இங்கே மிகச் சிறிய நேரத்தில் தானே பார்க்கிறோம்.

கணவனோடு ஒன்றிவாழும் உத்தமிகள் எதிர்க் கட்சியில் இருவர். வாலி பெரிய வீரன். கல்லினும் இரும்பினும் வலிய உடலைப் பெற்றவன். அஞ்சாத நெஞ்சும் ஆற்றலும் பெற்றவன். அவன் மனைவி தாரை மெல்லிய உடலும் அன்புப் பெருக்கும் உடையவள். சுக்ரீவன் வாலியிடம் தோற்று இனித் திரும்பாப் பயணமாக மலையிற் பதுங்கி ஒளிந்தான். நாட்கள் பல ஆயின. ஆனால் ஒருநாள் சுக்ரீவன் வந்து சண்டைக்கழைத்தான். வாலியின உடலில் வீரக்கனல் கோபத்தீ பொங்கி எரிகின்றது. அந்தத் தீயில் தாரையின் நீண்ட கூந்தல் பற்றிக்கொண்டது என்கிறார் கம்பர்.

வாயிடைப் புகைவர
வாலி கண்வரும்
தீயிடைத் தன்நெடும்
கூந்தல் தீகின்றாள்

தளிரனைய அவள் உடல் எப்படி வெதும்பியதோ? பரிபூரண கோபக் கொதிப்பில் நிற்கிற வாலியைத்தடுத்து உரைக்கிறாள். "சுக்ரீவன் புதுப் பிறப்பு பிறந்துவிடவில்லை; புதிய பலத்தையும் உடலில் ஏற்றிக்கொள்ளவில்லை. ஏதோ துணைவலி பெரிதாக இருப்பதால் வந்திருக்கிறான்." என்றாள். வாலி கேட்பானா? போரிட்டு அநியாயமாகப் மடிந்தான். தாரை வருந்தி வாழ்விழந்தாள். கணவன் செயலை மறுத்து வெற்றி பெறாத மற்றொரு நங்கை மண்டோதரியார். "சீதையென்று அமிர்தத்தால் செய்த நஞ்சை நுகர எண்ணாதே விட்டுவிடு" என்று சொல்லியும் கேளாத இராவணனோடு வாழ்ந்து வருந்திய நங்கை இவர். ஒரு பெண்ணின் இன்பத்தைத் தான் அடைய எண்ணிக் குலம் முழுவதையும் அழியவிட்ட இராவணனை மண்டோதரியார் தடுத்தும் கேளாது அழிந்தபோது அவருடைய மனநிலையைக் காட்டும் ஓர் பாடற் பகுதி.

அன்னையவள் சீதைஅனைத்துலகும்
ஈன்றாள் என்று
உன்னி உரைத்தேன்
உரைகேளாது உத்தமனே.

பிழை செய்தாலும் தடுத்தும் கேளாதழிந்தாலும் மண்டோதரியார்க்கு உத்தமன் இராவணனை யல்லாது யார்? நங்கை பின் வாழ்வை விரும்பவில்லை. இராவணனார் உடலின் மேல் வீழ்ந்தாள். இறந்து போனாள் என்று கம்பர் கதையை முடித்துவிட்டார்.

மற்று வாழ்வில் நேராக வாழ்ந்த சதிபதிகள் இருவரை நாம் பார்க்கிறோம். இராமனைப் பெற்றவள், கௌசலை. தெய்வக் கற்பினாள். மகுடம் தாங்க நின்ற தன் மகனை ஒரு நொடிப்பொழுதில் பரதேசி வேடம் போட்டுக் காட்டுக்குத் துரத்தினாள் சக்களத்தி. பிள்ளையின் பிரிவு கேட்டுப் பெற்ற குடல் துடிக்கிறது. துன்பக் கடலில் கிடந்து தவிக்கிறாள். இந்தத் துயரத்திற்கு மாற்று மருந்து தேடிக் கணவன் இருக்குமிடஞ் செல்லுகிறாள். அவன் நிலை மிஞ்சிப் போய்விட்டான். மகன் காட்டுக்குப் போனதை மறந்தாள். மன்னன் பிரிவு — நாயகன் பிரிவு உள்ளத்தைக் கவ்விவிட்டபடியினாலே இங்கே பாட்டு:

மன்னர்க்கு ஆருயிர் இம்மை
தேறி மயிற்குலம்
அனைய நங்கை கோசலை
மறுகி வீழ்ந்தாள்
வெய்யில்சுடு கோடை தன்னில்
என்பிலா உயிரின் வேந்தன்
"வான்நீர் சுண்டி மன்னற
வற்றி மறுகுற்ற
மீனே என்ன மெய்
தடுமாறி விழுகின்றாள்"

சீதையும் இராமனும் ஒத்த காதலர். ராமன் பிரிவைச் சீதை சகிக்கவில்லை. உடன் சென்றாள். கூனி கைகேயியின் சூழ்ச்சி இந்தச் சதிபதிகளைப் பிரிக்கவில்லை. ஆனால் சூர்ப்பநகை—இராவணன் சூழ்ச்சி பிரித்து விடுகிறது. பிரிந்த சதிபதிகள் இருவரும் படாத பாடு படுகின்றனர். எனினும் இருவரும் கொண்ட காதல் மறுவற்று விளங்கியது. "அருந்து மெல்லடகு ஆரிட அருந்தும்; விருந்து கண்டபோது என்னுறும் என்று விம்மும்" என்ற தேவியின் நிலை—கவலை சதிபதிகளின் உள்ளூறு பிணைப்புக்கு மிகப் பெரிய எடுத்துக் காட்டாகும்.

இனிக் கணவன் விருப்பத்துக்கு மாறுபட்டு நின்ற மனைவியர் இருவரை நாம் காண்கிறோம். ஒன்று அகல்யையும் கௌதமரும். பிழையை—மீட்சியில்லாத ஒரு பிழையை அகல்யை செய்துவிட்டாள். கணவன் கல்லாகக் கழித்துவிட்டார். உலகின் முன் கல்லாகக் கிடந்த அப்பெண்ணை அழைத்துக் கௌதமர் கையில் இவளை மனைவியாக வைத்து வாழ் என்று கொடுத்தான் இராமன். இது இராம இராஜ்யம். தீராத பழியென்றும் பரிகாரமில்லாத பிழையென்றும் உலகத்தாரால் கருதப்படும் பிழை மன்னிக்கப் பட்டது. குற்றத்துக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. குற்றத்துக்குத் தண்டனை அனுபவிக்கப்பட்டதும் பரிசுத்தமாகி விட்டாள் அகல்யை.

மற்றொருத்தி கைகேயி. இவள் வாய்மை மன்னனின் காதல் களஞ்சியம். சரியாகத் திரும்பினாள். எதிர்ப்பக்கத்தில் உயிரனைய பிள்ளையைக் காட்டுக்குத் தள்ளு என்றாள். நாயகன் தவிக்கிறான்; அழுகிறான். துடிக்கிறான். புரளுகிறான். "மற்றையதொன்றும மற" என்று காலில் விழுந்து கும்பிடுகிறான்; கெஞ்சுகிறான். ஒன்றும் நடக்கவில்லை. உடல் வாடி உயிர் தேய்கிறான். தேய்ந்து தேய்ந்து மடிந்தே போனான். ஆனால் அவன் நீ என் மனைவி அல்ல என்று கூறி அந்த அம்மையாரைச் சதிபதித் தொடர்பிலிருந்து நீக்கிவிட்டான். சத்தியத்தையும் அஹிம்ஸையையும் கைக்கொண்ட தசரதன் வேறென்ன தான் செய்யமுடியும். உதவி மறுப்பைச் செய்தான் உயிரைவிட்டான்,

இராவணவதம் முடிந்தது. அதன் பின்பு தசரதன் மேலுலகிலிருந்து வந்து இராமனைக் காண்கிறான். உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறான். நதியின் பிழையன்று நறும்புனலின்மை என்று அன்று அயோத்தியில் கூறிய இராமபிரான் தசரதனிடம் கேட்ட வரம் என்ன?

தீயளென்று நீ துறந்த என்
தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம்
தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன
உயிரெலாம் வருத்தி.

## சகோதரர்கள்

சா. கணேசன்

இராம இராஜ்யம் அது ஒரு அற்புதம். கேவலம் தோன்றிய சிறிதுகாலத்தில் மறைந்துபோகும் அற்பாயுஸ் இராஜ்யமா அது? இல்லை. அது கவியின் கனவு. [illegible] கவி கம்பனின் காவி[illegible].

ஒரு இராஜ்யத்தில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் முழுவதையும் இராம இராஜ்யத்திலே காணலாம். எத்தனை எத்தனை காட்சிகள். வெறும் கண் காட்சிகளா? இல்லை; உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சி ஒளி ஊட்டும் உண்மைக் காட்சிகள்.

அவற்றில் சிலவற்றை முன்னே கண்டோம். இனி அந்த இராஜ்யத்திலே சகோதரர்கள் எப்படி வாழுகிறார்கள் என்பதையும் கொஞ்சம்பார்க்கலாமா? சரி.

இராமன் இராஜ்யத்தின் தந்தை தசரதன். மூன்று பட்ட மகிஷிகளின் மூலம் அவனுக்கு நான்கு புத்திரர்கள். இராமன், பரதன், இலட்சுமணன், சத்துருக்கன். இவர்கள் தான் அந்த நால்வரும்.

இவர்களுள் இராமனும் இலட்சுமணனும் ஒரு கூட்டாளிகள். அப்படியே பரதனும் சத்துருக்கனும். இந்த இரண்டு ஜோடிகளும் என்றும் எங்கும் இணைபிரியாத ஜோடிகள். அதனாலேதான் உலகத்தார் எல்லாம் "இராம இலட்சுமணர்" என்றும் "பரத சத்ருக்னர்" என்றும் பிரித்து இணைத்துப் பேசுகிறார்கள். இல்லையா?

இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்பதுதானே கைகேயியின் கோரிக்கை. இலட்சுமணனும் ஏன் பின் தொடர்ந்தான்? ஒரு பசுவை வெளியே துரத்துகிறோம். அப்பொழுது கன்றுக்குட்டி மட்டும் வைக்கோற்போரைச் சுற்றிக் கொண்டே நிற்குமா, என்ன? வெளியே ஓடும் பசுவைக் கன்றும் தொடர்வது நமக்கு ஒரு ஆச்சரியமாகப்படுமா? இந்த உண்மை கம்பன் கருத்தில் ஊறிக்கிடக்கிறது. அதுவே பரதன் வாக்கிலிருந்து

"கன்றும் தாயும் போவன
கண்டும் கழியீரே"

என்று வெளிப்படுகிறது.

அப்படி இலட்சுமணனையும், இராமனையும் கன்றையும்—பசுவையும் போலப் பிணைத்து வைத்திருப்பது என்ன?

இராமனே தன் ஜீவன் என்று கருதுகிறான் இலட்சுமணன்; இராமனின்றித் தானில்லை; இராமனைப் பிரிந்து வாழுவது என்பதை இலட்சுமணனால் சிந்திக்கக்கூட முடியாது. அப்படி அவனுள்ளம் இராமனுடன் அவனைப் பிணைத்து வைத்திருக்கிறது. இந்த உண்மையை இலட்சுமணனைக்கொண்டே சொல்லச் செய்கிறான் கம்பன் அதைக் கேளுங்கள்;

நீருள எனில்உள மீனும் நீலமும்
அதைப்போல அண்ணா
"நானும் சீதையும் யார்உளர்
எனில் உளேம்? அருளுவாய்"

கேட்டீர்களா? தான் மீனும் சீதை நீலோற்பல மலராம். இராமனாகிய தண்ணீர் இல்லாவிட்டால் மீனும் நீலமலரும் வாழ முடியுமா? என்று எவ்வளவு பக்குவமாகச் சொல்லுகிறான் இலட்சுமணன் பார்த்தீர்களா?

அதனாலே யல்லவா இராமன் வனவாசம் போகவேண்டும் என்ற செய்தி கேட்டுக் கையால் நிலம் தடவிக் கண்ணீரால் மெழுகிக் கதறும் நகரமக்கள் கூட ஐயா இளங்கோவே ஆற்றுதியோ நீ என்று பொங்கிப் பொருமுகிறார்கள்?

சரி, இராமன் அக அழகைப் பார்ப்போம் இனி

"காடு உனக்கு நாடு பரதனுக்கு"

என்றுரைக்கும் கைகேசியின் கடும் சொல் நமக்குக் கூட எவ்வளவோ கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்குகிறது. ஆனால் இராமனுக்கு...? உள்ளத்தில் எவ்வித துவேஷமும் உண்டாகவில்லை. அகத்தின் அழகு முகத்திலே தெரியாதா? அப்பொழுதலர்ந்த [illegible] முகப்பொலிவுடன்

"பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றதன்றோ"

என்று மனமாரச் சொல்லும் இராமன் சொல் கேட்கிறதல்லவா?

கைகேசியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட இராமன் பெற்றதாயிடம் வந்து நிகழ்ச்சியைக் கூறும் பணபினைச் சிறிது நோக்குங்கள்.

"நின்காதல் திருமகன்,
பங்கமில் குணத்து எம்பி, பரதனே
துங்கமா முடி சூடுகின்றான்"

நின் ஆசைக்குரிய அருமை மகன் அப்பழுக்கில்லாத அருங்குழைமணி: என் தம்பி, ஆம் பரதன்தான் முடி சூடுகிறான். இப்படி யாரிடம் கூறுகிறான்? தன் வயிற்றிலே பிறந்து பட்டத்திற் குரிய வார்சான இராமன் பட்டம் துறந்து பரதேசியாய்க்கானகம்செல்ல நேரிட்டதே என்று வருந்திப் புழுங்கிக் கொண்டிருக்கும் கௌசல்யா தேவியிடம் தான் என்பதை எண்ணும்பொழுது இராமனின் கல்யாண குணம் நம்மையே ஆகர்ஷித்துக்கொண்டு விடுகிறதல்லவா?

இனிப் பரதனின் குணபாவத்தைக் கொஞ்சம்பார்ப்போம்.

கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத்திக்குத் திரும்புகிறான். தாயைக் கண்டான். தந்தையின் மரணத்தைக் கேட்டான். பெருந்துயர் உற்றான். தந்தையைப் பறிகொடுத்த துயரம் எப்படித் தீரும்? பரதனே சொல்லுகிறான் கேளுங்கள்.

எந்தையும் தாயும்
எம்பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து
இராமன் ஆதலால்
வந்தனை அவன்கழல்
வைத்த போதலால்
சிந்தைவெம் கொடுந்துயர்
தீர்கலாது

அண்ணன் இராமனே என் தந்தை; ஏன், என் தாயும் அவனே; அதுமட்டுமா, நான் வழிபடும் கடவுளும் கூட இராமன்தான். ஆகவே அவன் திருவடிகளில் வணங்குவதொன்றே என் துயரினைப் போக்கும் என்றுரைக்கும் பரதனுக்குத்தான் இராமனிடம் எவ்வளவு பக்திப் பெருக்கு.

இராமன் கானகம் சென்றுவிட்டான். புத்திர சோகமே தசரதன் உயிரை உண்டது என்பதை எல்லாம் அறிந்து பிறகு பரதன் உள்ளம் படும் பாட்டைப் பாருங்கள். அவன் வாயிலிருந்து வெறும் வார்த்தைகளா வருகிறது. உள்ளக் கொதிப்பல்லவா உதிர்கிறது ........ கேளுங்கள்.

மானவும் உளன்ஒரு
மன்னவன் வன்சொலால்
மீளவும் உளன்ஒரு
வீரன் மேயபார்
ஆளவும் உளன்ஒரு
பரதன் ஆமெனில்
கோள்அலது அறநெறி
குறையுண்டகுமோ?

அதனாலே யல்லவா தன்னரும் பெரு நீதித் தனியாறு புக மண்டும் பள்ளமெனும் தகையனும் பரதனை இராமன் தழுவிக்கொண்ட காட்சியைக் கண்ட கம்பன்.

தயா முதல் அறத்தினைத் தழுவிற்று. என்று வாயாரப் பாடி மகிழ்கின்றான். இல்லாவிட்டால் இராமன்தான் பரதனை சேனையர் தருமத்தின் தேவு, செம்மையின் ஆணி என்றெல்லாம் பாராட்டிப் புகழ்வானா?

இனிச் சத்துருக்னன் குண சௌந்தர்யம் எப்படிப்பட்டது என்று பார்ப்போம். தசரதன் புதல்வர்களைக் கம்பன் சதுர்வேதங்கட்கு ஒப்பிட்டுப் பல இடங்களிற் பேசுகிறான். ரொம்பப் பொருத்தம். நாலாவது புதல்வன் சத்துருக்னன். நாலாவது வேதம் அதர்வணம் உலக வழக்கில் அதர்வணம் எவ்வளவு பிரபல்யத்தை அடைந்திருக்கிறதோ அவ்வளவுதான் இராம இராச்சியத்திலும் சத்துருக்னன் பிரபல்யம் அடைந்திருக்கிறான் என்றாலும் அவனை நாம் நன்றாக இனம் கண்டுகொள்ள முடிகிறது.

நிறத்தாலும் குணத்தாலும் பரதன் இராமனை ஒப்புவன். அப்படியே சத்துருக்கன் இலட்சுமணனை ஒத்து விளங்குகிறான். அநீதியைக் கண்டால் இலட்சுமணனைபபோலவே அவன் தம்பியும் கோபமும் ஆத்திரமும் கொண்டு கொதித்தெழுகிறான்.

ஆனாலும் அண்ணன்மாரிடம் எவ்வளவு பிரேமை, மரியாதை, அடக்கம் உடையவனாயிருக்கிறான். அதையும் எவ்வளவு கச்சிதமாய் வெளிப்படுத்தவும் செய்கிறான் என்பதைப் பாருங்கள். (தொடரும்)

## கடையைக் கட்டுங்கோ!

'யாழ்ப்பாணன்'

கவுன்சில் முடியப் போகு தையா கடையைக் கட்டுங்கோ
கனக்க வெட்டிப் புடுங்கி நீங்க களைச்சுப் போனீங்கோ
பவுண் முடிச்சு பை நிறம்ப திணிச்சுக் கொண்டீங்கோ
பத்து வருடம் மேலாய்ப் போச்சு கடையைக் கட்டுங்கோ.

தொண்டை வரளக் கத்தி நீங்க துவண்டு போனீங்கோ
தூக்க மின்றிப் பாடு பட்டுச் சோர்ந்து போனீங்கோ
பெண்டு பிள்ளை பெருக்கி நீங்க புளைச்சு வந்தீங்கோ
பிடிச்ச சனியன் எம்மை வாட்ட இளைச்சுப் போனீங்கோ

பட்டம் பதவி வேட்டைக் காகப் பாய்ஞ்சு போனீங்கோ
பணத்தைக் கொட்டி போட்டிப் போட்டு பலனுங் கண்டீங்கோ
வட்ட மான பெஞ்சி லேற வாயைப் பிளந்தீங்கோ
வருடம் பத்து மேலாப் போச்சு கடையைக் கட்டுங்கோ.

மல்லுக் கட்டி சண்டை போட்டு மடக்கிக் கொண்டீங்கோ
மாடு போவல எதிர்த்து நின்று முட்டிக் கொண்டீங்கோ
கல்லுப் படி உறுண்டு நீங்க கறணம் போட்டீங்கோ
கவுன்சில் போதும் அப்பா நீங்க கடையைக் கட்டுங்கோ.

பார தத்து மாவாங்க போலே பக்கட்டுக் குள்ளே
பதவி றிசிக்னன் பேப்ப ரொண்டுங் கொண்டு போனீங்கோ
கார சத்தங் கேட்டு நீங்க குடுகிக் கொண்டீங்கோ
கவுன்சில் குப்பைத் தொட்டிக் குள்ளே நோட்டை விட்டீங்கோ.

நெல்லுப் போட்டால் புல்லு முளைக்குது நம்ம நாட்டிலே
நீரும் வாய்க்கால் தேங்கிப் பாயுது நும்ம பேச்சிலே
உல் லாசப் பவனி போவும் மவா ராசாக்களே
உழுத்த கவுன்சில் போது மப்பா கடையைக் கட்டுங்கோ.

குட்டிக் கூட்டங் கூட்டிக் கூட்டி கொசு கொசுத்தீங்கோ
கொட்டு மேளங் கொட்டி நீங்க குதித்துக் கொண்டீங்கோ
அட்ட திக்கும் நும்ம பேரே அடிச்சுப் பறக்குது
ஆறு எட்டு பத்துக் கட்சி என்றே சிரிக்குது.

சீமைச் சாமி கொடுத்த வரம் சித்திக்க போவுது
சிறந்த பாளி மெண்டைப் போலே கவுன்சில் மாறுது
நேர மாச்சு வோட்டுச் சேர்க்க வீட்டுக்கு வாங்கோ
நிரம்ப வோட்டு போட்டு நாங்க அனுப்பி வைப்பங்கோ

கவுன்சில் முடியப் போகு தையா கடையைக் கட்டுங்கோ
கனக்க வெட்டிப் புடுங்கி நீங்க களைச்சுப் போனீங்கோ
தவிசு மெத்தை மூட்டை யெல்லாங் சுறுட்டிக் கட்டுங்கோ
தாவிப் படி தாண்டித் தாண்டி நடையைக் கட்டுங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: விய, சித்திரை உங

## புதிய அரசியற் கட்சிகள்

இலங்கையின் புதிய தேசாளுமன்றத்திற்கு அடுத்த வருடம் தேர்தல் ஏற்படுமென்றநம்பிக்கையுடன்—எத்தனையோ புதிய கட்சிகள் இப்போது முளைக்க ஆரம்பித்துவிட்டன. இக் கட்சிகளின் கொள்கைகளும் நோக்கங்களும் தோற்றத்தில் மிக்க கவர்ச்சியையுண்டுபண்ணுகின்றன. தம் நோக்கத்துக்கிசைய நாற்றில் ஒருபங்காவது செயற்கையில் கைகூடின், அப்போதே இக் கட்சிகளின் இலட்சியங்களில் நாம் நம்பிக்கைவைக்கலாம். தேர்தல் முடியுமட்டும்—தமது எண்ணம் சித்தியடையும்வரையும்—போலியாக நடித்து, யாரையும் ஏமாற்றுவதே நோக்கமெனின், இக்கட்சிகள் தோன்றியபடி மறைந்துசெல்ல விடுவதே முறையாகும். தலைவரெனத் தம்மை மதிப்போருள் அநேகர், தேர்தற்காலம் சமீபித்தவுடன் தேசத்தொண்டராகநடிக்க முற்படுகின்றனர்.

பொதுமக்களாயுள்ளோர் தமது உரிமைகள் யாவை, கடமைகள் யாவை என்பதைச் சிந்தியாது பராமுகமாயிருக்கும் வரையும், போலித்தலைவர்களின் ஆட்டங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். அரசியல் ஞானமுடைய மக்கள் வசிக்கும் நாடுகளில், இப்படி ஏமாற்றுவதென்பது இயலுமா? இலங்கைத்தேசாளுமன்றத்தில் எவ்விதத்திலும இடம பெற்றுவிட வேண்டுமென்ற வாஞ்சையுடன், அதற்கு எவ்வழி இயைந்ததோ அதைக் கைக்கொள்ளப் பின்னிற்கின்றாரில்லை. தமது சொந்த நன்மையைச் சதா தியானிக்கின்றாரேயன்றித் தேசத்தின் சேமத்தைத் துரும்பாகத்தானுங் கொள்கின்றாரில்லை. தமமிடத்துள்ள பணம, அதிகாரம், சூழ்ச்சி என்பன, எதையும்பெறஉதவியாகுமென நினைக்குந் தலைவர்கள் பலர். இவர்களால் நமது இலங்காதுவீபம் மீட்சியை அடையுமா வென்பது மிக மிகச் சந்தேகத்துக்கிடமாகும்.

அரசியற்றிட்டம் வெளியாகவில்லை. தேர்தற்பிரிவுகள் வகுக்கப்படவில்லை. அபேட்சகர்களின் இலக்கணங்கள் கூறப்படவில்லை. அதற்கிடையில், இப்போது அநேக அபேட்சகர்கள் முன்வந்து தமது நாமதேயங்களைப் பகிரங்கஞ் செய்கின்றனர். சிந்தனுவுலகத்தில் ஓர் தேர்தற் பிரிவினையைச் சிருட்டித்து அதற்குத்தாம்அபேட்சகரென விளம்பரம் செய்கின்றனர். மேலும், பல கட்சிகளும் கொள்கைகளும் வகுப்பினருமுள்ள இந்நாட்டில், ஒன்றையாவது தமக்கு ஆதாரமாகக் கொள்ளாது, தாம் தனித்த கட்சியென்றுங் கூறிக்கொள்கின்றனர் சிலர். எவரையும் பகைக்காதிருப்பதே தேர்தல் வெற்றிக்கு வழியென அறிந்து இந்த உபாயத்தை இவர் மேற்கொள்ளுகின்றார் போலும். எக்கட்சியையாவது சேராதிருப்பின், யாவராலும்கைவிடப்பட்டுத் திரிலோக சுவர்க்கத்தை அடையவேண்டியதுதான். எல்லா உபாயங்கட்கும் நம் நாடு நிலைக்களமாயிருப்பது பெருந் துக்கமும் வெட்கமு மாகின்றது.

சென்ற பத்து வருடமாக அரசாங்கசபை புதிதாகத் தெரியப் படாமையாற்றான், இலங்கையின் அரசியல் வாழ்வு மிக்க கேவல நிலையை அடைந்தது. தம்மை எவ்விதமும் அசைத்துவிட வியலாதென வெண்ணி, அரசாங்க சபை அங்கத்தவர் தேசநன்மையைப் புறத்தே விடுத்து தமதெண்ணப்படி நடக்க முற்பட்டனர். தாம் வசிக்கும் ஸ்தானங்கள் தமது சொந்தமென எண்ணினோரும் பலராவர். அத்துடன் யுத்த சங்கடங்களும் ஏற்பட்டுப பொது மக்களின் வாழ்க்கையைப் பல விதத்திலும் பங்கமடையச் செய்து விட்டன. எந்தப் பிழையான வழியையும்—சன்மார்க்கத்துக்கு விரோதமாக — மேற்கொண்டாவது பொருள் சம்பாதிப்பதொன்றேசெய்யவேண்டியதென்பது பொதுவாக எல்லோருடைய நோக்கமுமாகின்றது. அபேட்சகர்ளாக முன் வருவோரும் மந்திரிபதவிகளை நினைத்து வாயூறிக்கொண்டே ஓடித் திரிகின்றனர். பதவி வேட்டையே எங்கும் நடைபெறக் காணலாம். தேச நலத்தை நாடுபவர் மிகச் சிலரேயாவர்.

தேசநலத்தை நாடியுழைக்கும் கட்சிகள் நம் நாட்டில் வேரூன்றி நிலைபெறுதமையாற்றான், நினைத்தபடி எவருந் தம்மைத் தலைவராக முடிவு செய்துவிடுகின்றனர். ஒன்றோ அல்லது இரண்டு மூன்றோ காரியமில்லை; உறுதியான கொள்கைகளையுடைய கட்சிகள் நிலைபெற வேண்டும். இலங்கையில் இதுவரையும் இவ்வித கட்சிகள் நிலைபெற்றதில்லை. சனநாயக அரசியல் உறுதிப்பாடடையாமையாற்றான் இக்கட்சிகளும் திடமாக நிலைபெறவில்லை. இனி ஓரளவுக்குச் சுதந்திரத்தை இலங்கை வாசிகள் பெறப் போகின்றனராகையால், கட்சிமுறை அரசியல் படிப்படியாக நிலைபெறல் வேண்டும். தேசமுன்னேற்றத் தொண்டுகள் இனித் துரிதமாகச் செய்யப்படுமாகையால அரசியற் கட்சிகளும் அதற்கு அனுசரணையாக ஏற்படுவது நிச்சயம். மேலும் தேசிய நோக்குடைய கட்சிகளே பொதுமக்களின் அனுதாபத்தைப் பெறும. வகுப்புவாதக் கட்சிகளும் போலித்தலைவர்களும் அழிந்தொழிந்து மறைந்து போகவேண்டிய காலம் சமீபித்துவிட்டது.

### என்ன தாமதம்?

நடுப்பகலிற் கண்தெரியாத குருடர்போல் மயங்கித் தத்தளிக்க வேண்டிய காரணம் யாதோ? பிரிட்டிஷ் மந்திரிசபைக் குழுவினர் மூவரும் என்ன செய்வதென இன்னும் முடிவு கூறுதிருப்பது விந்தையாகின்றது. இந்தியமக்களுக்குச் சுதந்திரமளித்துச் செல்லவே இவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். தாமதமின்றி அளிக்கலாமே. முஸ்லீம் சங்கத்தினர் இணங்காவிடினும், நிச்சயமாகச் சுதந்திரம் வழங்கப்படுமென முதன் மந்திரி அட்லி கூறினரே. மந்திரிசபைக் குழுவினர் ஒரு மாதகாலமாக முயன்றும் இன்னும் ஜனுப் ஜின்னுவினைத் திருப்திப்படுத்தினுரில்லை. இவருக்காக இந்தியரின் சுதந்திரம் பின்போடப்படவியலாது. சேர்ச்சில் கேணல் எமறிக் கோஷ்டியார் போல் இந்து—முஸ்லீம் வேற்றுமையே காரணமாகக் கூறினிற்பின், இம் மந்திரிசபைக் குழுவினர் இந்தியா வரவேண்டியதில்லை. இங்கிலாந்திலிருந்தே சுதந்திரம் இப்போது இல்லை என்றுவிடலாம். எவ்விதத்திலும் இந்தியாவைப் பிரித்துவிட வேண்டுமென்பதே ஜனுப் ஜின்னுவின் நோக்கம். இதற்குக் கனவிலும் காங்கிரஸ் கட்சியினர் இணங்கமாட்டார் மிக்க ஆதிக்கம் படைத்த மத்திய அரசாங்கம் வேண்டுமென்கின்றனர் காங்கிரஸ் கட்சியினர். அப்படியாகாவிடின், யுத்தகாலங்களில் இந்தியாவைத் திறமையாகப் பாதுகாப்பதென்பதெப்படி? சமயத்தை ஆதாரமாகக்கொண்டு அரசாங்கம் உலகில் எந்நாட்டிலும் நடந்ததில்லை. நடக்கப்போவதுமில்லை. ஜனுப் ஜின்னுவின் முஸ்லீம் ஏகாதிபத்தியத்தை அமரிக்க அரசியல்வாதிகளும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளும் கண்டித்துள்ளார். இவர் எண்ணத்துக்கு இடங்கொடுப்பின் பிரமாதமான மதச்சண்டை இந்தியாவில் என்றும் நிகழ்ந்து நிற்குமென்கின்றனர். மாகாணங்கட்குச் சுயாட்சி வழங்குகையில், ஒற்றுமைப்பட்ட மத்திய அரசாங்கத்தை ஜின்னு ஏன் வெறுக்கின்றாரோ?

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

அடுத்த வருடம் புதிய அரசியற்சபை ஏற்படுவதைப் பார்க்கப் போகின்றோம். பார்லிமெண்டுக்குள் நுழைவதற்குப் பலருக்கு ஆசை இருக்கத்தான் செய்யும். யாழ்ப்பாணத்திலுள்ள அநேகர் இப்போதே மேளதாளங்களுடன் முன்வந்திருக்கின்றனர். இலங்கையில் வேறெந்தப் பகுதியிலும் இந்த ஆர்வமும் மோகமும் இன்னும் அரும்பவில்லை. ஆனுல் யாழ்ப்பாணத்திலோ தேர்தற் கதைகள் மும்முரமாக அடிபடத் தொடங்கிவிட்டன. 'அவர் வந்தால் நான் ஏன் வரக் கூடாது'. 'அநேககாலமாக எனக்கு இருக்கும் ஆசையை நீர் ஏன் காணும் கெடுக்க யோசிக்கின்றீர்; வேறு இடத்துக்குப் போய்ப்பாரும்'; 'அருமையான கவண்மேந்து வேலையை எறிந்துவிட்டு இந்தக் கெட்ட தொழிலுக்கு உம்மை யார் காணும் வரச்சொன்னது'... இத்தியாதிப் பேச்சு வார்த்தைகள் யாழ்ப்பாணத்தின் பல கோணங்களிலும், மூலை முடுக்குகளிலும் இன்று அடிபடத் தொடங்கிவிட்டன. ஆரம்பசூரத்தனங்களுக்குங் குறைவில்லை! அடகடவுளே! இதென்ன தலையிடி?

### எதிர்பாராதது

ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் எம். எல். ஏ. சென்னை போய்ச் சேர்ந்துவிட்டார். "சோல்பெரி அறிக்கை இலங்கையிலுள்ள இந்தியர்களை அதிகமாகப் பாதிக்கின்றது. அநீதிகளும்விளைத்திருக்கின்றது"...எனச் சென்னைப் பத்திரிகை நிருபர் ஒருவருக்குத் தெரிவித்திருக்கின்றார். இங்குள்ள இந்தியர்கள் டைம்ஸ் பத்திரிகையையும் சீமைத் தேவதைகளையும் நம்பி யிருந்தார்கள். தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக லண்டனுக்கும் யாத்திரை செய்தார்கள். கண்மூடித்தனமான சில கோரிக்கைகளையுங் கேட்டார்கள். சுதந்திர வாழ்வை இவர்கள் துளிகூட விரும்பவில்லை. நினைத்தற்கு மாருக அரசியற் கடிவாளம் சிங்களரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதைக்கண்டு இப்போது மிரள மிரள விளிக்கின்றனர். அவ்வளவுதான்.

### ஜென்னிங்ஸ் திருப்பணி

இலங்கை மக்கள் தாய்மொழியை ஆர்வத்துடன் பயில்வது பல்கலைக் கழக உப அத்தியட்சகருக்குப் பீதியை 'உண்டாக்குகின்றது. வளம்பெற்றிருக்கும் ஆங்கில மொழியின் வண்மையை நான் இங்கு குறைகூறவரவில்லை. ஆனுல் டொக்டர் ஜென்னிங்ஸ் தனது தாய்மொழிக்கு எங்கள் அனைவரையுஞ் சதா தூபதீபங் காட்டும்படி கூறுவதும், அதற்காகப் பல நாடுகளை ஆதாரங்களாக எடுத்துக் கூறுவதும் அர்த்தமற்றன. டொக்டர் அவர்கள் அப்பழுக்கற்ற ஏகாதிபத்தியதாசன். இலங்கை மக்கள் இவருடைய உளுத்துப்போன உபதேசங்களை இனிக் கேட்கப் போவதில்லை. வந்தவேலையை முடித்துக்கொண்டு சொந்த நாட்டுக்குத் திரும்புவதுதான் பேறிஞர் கடன். இலங்கை மக்களுக்குஞ் சிறிதளவு மூளை உண்டு என்பதை டொக்டருக்குச்சொல்லிவைக்கின்றேன்.

### தமிழ் ஆசிரியர்கள் கவலை

புதிய சம்பள விகிதத்திட்டமும் ஆசிரியர்களை வெவ்வேறு வகுப்புக்களாகப் பிரித்து வைத்திருக்கும் முறையும் உண்மையாகவே தடுமாற்றத்தைக் கொடுக்கின்றன. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் அநேகர் ஆங்கிலத்தில் மற்றிக்குலேஷன், சீனியர் சோதனைகளிலும் சித்தியடைந்திருக்கின்றனர். இவர்களின் கதியென்ன? சம்பள உயர்வு இவர்களுக்கும் உண்டா? அடுத்ததாகப் பயிற்றப்படாத ஆசிரியர்களும் வாழ்க்கையின் அதிகமான பாகத்தைப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதிற் செலவு செய்திருக்கின்றனர். இவர்களுக்கு எந்தப் பிரிவில் இடங்கிடைக்கும். இந்தச் சிக்கலான நிலையைத் தீர்த்துத் தமிழ் ஆசிரியர்களின் பீதியை அகற்றி நீதியாக நடந்துகொள்வது கல்விமந்திரியாரின் கடமையாகும்.

### புதிய சட்டம்

தொழிலாளர் மின்னுமல் முழங்காமல் வேலை நிறுத்தம் செய்வது அதிகார வர்க்கத்துக்குப் போதுமென்றாயிற்று. பொதுசனங்களின் சௌகரியங்களைப் பாதிக்கும்முறையில் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமானதெனக் கருதப்படுமாம். இத்தகைய வேலைநிறுத்தக்காரர்களைத் தண்டிப்பதற்குப் புதிய சட்டமொன்று அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டுவருகின்றதென அறிகின்றேன். ஆத்திரகாரனுக்குப் புத்தி மத்திபம் என்று சொல்வார்கள். ஆகவே, ஆர அமரயோசித்து இப்புதிய சட்டத்தைத் தயாரிப்பார்கள் எனத் தொழிலாளர் உலகம் எதிர்பார்க்கின்றது. கொம்யூனிஸ்டுகளின் மூளைக்கும் இது நல்ல வேலை கொடுக்குமல்லவா?

### ஆனந்தம் ஒருகலை

இன்றைய உலகிற் சகலதுங் கலையின்பெயரால் சமாளிக்கப்படுகின்றன. பல்துலக்குவது ஒரு கலை. தோசை சுடுதல் ஒருதனிக் கலை. தேனீர் தயாரித்தல்மற்றோர் கலை. இவற்றினும் மேலாக இப்பானத்தை அருந்துவதே ஒரு தனிக்கலை! இதேபோல ஆனந்தமென்பதும் ஒருகலையென்று ஸ்ரீ சத்திய மூர்த்தி தமது மகளுக்கு எழுதிய கடிதமொன்றிற் கூறியிருக்கிறார். அதைக்கேளுங்கள்: "ஆனந்தம் என்பது ஒரு தனிக் கலை. அதற்கு உன்னதமான ஸ்தானமுண்டு. தானும் சந்தோஷமாக இருந்து பிறரையும் சந்தோஷிக்கச் செய்வதென்பது தெய்வீக அருள்வாய்ந்த குணம். வாழ்க்கை முழுதும் சந்தோஷகரமானதென்பது கிடையாது. நெருக்கடியான சந்தர்ப்பங்கள் கஷ்டங்கள் இவையெல்லாம் வாழ்க்கையில் சம்பவிக்கின்றன. இதைச் சமாளிக்க வேண்டும். கஷ்டங்கண்டு சிலர் வெருண்டு போகிறார்கள். நல்ல உணர்ச்சியோடு கஷ்ட நிஷ்டூரக்களைச் சமாளிக்க வேண்டும்........... கலையை அனுபவிக்க வேண்டுமானுல் அதன் நுணுக்கங்கள் தெரிந்திருக்க வேண்டாமா? இதைப்பற்றி உன்னேடும் உன் அம்மாவுடனும்நான்சிற்சில சமயங்களில் விவாதித்திருக்கிறேன். எனக்குச் சங்கீதத்தில் அபிமானம். ஆனுல் சங்கீத சாஸ்திர லக்ஷணங்கள் தெரியாது. ஆகவே, ஹாஸ்யமாக, "நல்ல விருந்துணவை ருசிப்பதற்கு நன்றாகச் சமைக்கத் தெரியவேண்டுமென்ற அவசியமில்லை" என்று நான் சொல்வதுண்டு. உண்மையில் உயர்வாகஉள்ளகலையாயினுல் அது பாமரருக்கும், பண்டிதர்களைப் போல சுவைதரும்..." ஆமாம், வாழ்க்கையே ஒரு கலையாக இருக்கும்போது சகலதும் இதற்குள் அடங்கிவிடுகின்றனவல்லவா?

பரமேஸ்வரக் கல்லூரியில்

வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

★

'காணிவல்' க்ளியாட்டம்

மே மாதம் 14-ந் தேதிமுதல் 20-ந் தேதிவரை.

மேன்மைதங்கிய தேசாதிபதியவர்கள்

மே மாதம் 14-ந் தேதி 4-30 மணிக்குத் திறந்துவைப்பார்கள்.

★

வெள்ளிவிழாப் பொன் நகரில்

கண்காணுக் காட்சிகள்

துவாரகையில்:

கண்ணன் லீலை, காமதேனு, கற்பகவிருக்ஷம்

இராமநாத நகரில்:

இரத்தினக் குவியல்கள்

- உல்லாசப் போதுபோக்கு
- இன்னிசை விருந்து
- இன்னும் பற்பல இன்பக் காட்சிகள்

பிரவேசம்: 25 சதம்

[2743]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# முக்கூட்டு மகாநாடு

## 'யூனியன்' அமைக்கத் திட்டம்?

**இந்திய மந்திரியின் அழைப்பை யேற்றுத் தேசியக் காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் சிம்லாவிற் கூடியிருக்கின்றன- இம் முக்கூட்டு மகாநாடு தங்குதடையின்றி நடைபெறுகின்றது.**

இந்தியாவில் நிற்கும் பிரித்தானிய மந்திரிகள் இதுவரை செய்து முடித்த விஷயங்களின் விபரம் ஒன்றுந் தெரியவில்லை. 'அப்படி நடந்திருக்கலாம்; காந்திஜியுடன் இப்படிப் பேசியிருக்கலாம்' என்ற செய்திகளே பத்திரிகைகளிற் காணப்படுகின்றன. இங்கிலையில் தூதுக்கோஷ்டியினர் காங்கிரஸுடனும் முஸ்லிம் லீக்குடனுங் கலந்தாலோசனைகள் நிகழ்த்துவது ஓரளவுக்கு மப்புமந்தாரத்தைத் தீர்க்குமென நம்ப இடமுண்டு. இம் முக்கூட்டுமகாநாடு சிம்லாவிற் கூடியிருக்கின்றது. இருவாரங்கள்வரை மகாநாடு நிகழலாம். இச்சமரச முயற்சி புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றது.

இருபெரும் பெரிவினராகிய இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஒரு புதுத் தளம் சமைப்பதே இப்புதிய சிம்லா மகாநாட்டின் அடிப்படையான நோக்கம். ஆகவே, இதுவரை போட்ட திட்டங்களெல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு தூதுக்கோஷ்டியினர் புதிய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இம் மகாநாட்டிற் கலந்துகொள்வதற்கு முன்னதாகவே மந்திரிகள் காங்கிரஸ் தலைவருக்கும் ஜனுப் ஜின்னுவுக்கும் விபரங்கள் அடங்கிய திட்டம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்கள். "முஸ்லீம்கவளப் பெரும் பான்மையோராகக் கொண்ட பகுதிகளை ஒரு யூனியனுகவும், இந்துக்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளை ஒரு யூனியனுகவும் அமைப்பது என்பது இந்தத் திட்டம்." பாகிஸ்தான் என்ற பின்னத்தை ஒப்புக்கொண்டாலன்றி எவ்வித பேச்சுக்கும் மறுத்துவந்த ஜின்னு தமது சகாக்களுடன் இம்மகாநாட்டிற் பங்கு பெறுவதற்குமுன் வந்திருப்பதே ஒரு புதுமையாகும். உச்சாணிக் கொப்பிலிருந்தவர் ஒருபடி இறங்கியிருக்கின்ருர் என்று கருதினுலும்எந்த நேரத்தில் ஜின்னு முட்டுக்கட்டை போடுவாரென்று சொல்லமுடியாது. தூதுக் கோஷ்டியினரின் அனுதாபத்தைப் பெறுவதற்காக ஜின்னு இம்மகாநாட்டுக்கு உடன்பட்டிருக்கலாம். இங்கு ஆலோசிக்கப்படும் விஷயங்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கமாட்டாது. அடிப்படையான பிரச்சினைகள் யாவும் ஆலோசிக்கப்படுகின்றன. இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு காங்கிரஸ் லீக உடன்பாடு மிக முக்கியம். எதிர்கால அரசியல் விஷயங்களில் ஈடுபட்டு முடிவுகள் காண்பதற்கு முன்னர் இம் முக்கூட்டு மகாநாடு இடைக்கால அரசாங்கம் அமைப்பதுபற்றி ஆலோசனை செய்யக் கூடும்.

**எது நிகழ்ந்த விடத்தும்** இந்தியாவின் எதிர்கால அரசியலுக்குக் குந்தகம் விளையமாட்டாதெனக் கூறலாம். இந்தியர்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிடவேண்டுமென பிரிட்டன் தீர்மானித்துவிட்டது. இத்தனைக்கும் சகல வகுப்பினர்களுக்குமிடையில் சமரச மனப்பான்மையும் விட்டுக்கொடுக்கும் நிலையும் ஏற்படுவது அவசியம். ஐக்கிய அரசாங்கத்தை ஏற்படுத்திய பின்னர்தான் அரசியல் யந்திரத்தை அமைப்பது சாத்தியமாகும். ஏதோ ஒரு கட்சி இசையவில்லை என்று சொல்லி இம்முறை இந்திய விடுதலையைத் தள்ளிவைக்க முடியாது. அப்படியானுல் அமெரியின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகும். சகல கட்சியினரையுஞ் சமாதானஞ் செய்வது பரம சங்கடமான ஒரு விஷயம் இவ்வித தொல்லை நிகழுமாகில் இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துவதே சிறந்த மார்க்கம்.

**முஸ்லிம்களை ஒரு யூனியனுகவும்,** ஹிந்துக்களை அதிகமாகக்கொண்ட பகுதிகளை வேருேர் யூனியனுகவும் அமைப்பது இந்தியாவின் பலத்தைக் குன்றச் செய்வதாகும். ஒவ்வொரு யூனியனும் தத்தம் பகுதிகளின் பாதுகாப்புகள், அந்நிய நாட்டு விஷயங்கள், செலாவணி போன்ற நிர்வாகங்களைப் புறம்பாக நடத்துவதாகில் இது பலமற்ற சங்கிலிக் கோர்வைபோல எந்த நிமிஷத்திலும் அறுந்து போகலாம். யூனியன் ஒரு புறமிருக்க மறுபாகத்தில் இந்திய சமஸ்தானங்கள் தங்கள் பாட்டில் ஆட்சி செலுத்துமாம். பின்னர் பேச்சு வார்த்தைகள் நிகழ்த்தி யூனியன்களுடன் சமஸ்தானங்கள் சேர்ந்து கொள்ளமுடியுமாம் இந்தத் திட்டம் இந்தியாவுக்கு ஏற்றதல்ல. கிரிப்ஸ் திட்டத்திலும் பார்க்க மகாமோசமானது. பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டி போயும் போயும் சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ளாமல் இந்திய மக்களின் நம்பிக்கையைப்பெற்ற கட்சியிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு ஊர் திரும்புவதுதான் விரும்பத்தக்கது. அப்படியன்றி சுயநலக் கும்பல்களின் பொறுப்பற்ற வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பது பிரிட்டனின் நோக்கமாகில் கடவுள்தான் இனி இந்தியாவைக் காப்பாற்றவேண்டும்

"இந்தத்தூதுக்கோஷ்டியால் எவ்விதநன்மையும் வரப்போவதில்லை. தொழிற்கட்சியுஞ் சரி, சேர்ச்சில் அரசாங்கமுஞ்சரி, இந்தியாவிஷயத்தில் கைவிரிதர்பார்தான் நிகழ்த்துவார்கள்" என சமீபத்திற் காந்திஜிக்கு மகாகனம் ஸ்ரீ நிவாசசாஸ்திரியார் தெரிவித்தார். மரணப்படுக்கையிலிருந்த சாஸ்திரியாருக்கு கடைசிவரையிலும் பிரிட்டனில் நம்பிக்கையிருக்கவில்லை. "இருந்தும் நாங்கள் பிரிட்டனை நம்பத்தான் வேண்டும்" என காந்திஜி ஸ்ரீ சாஸ்திரியாருக்குக் கூறினுர். மகாத்மாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் பிரிட்டன் புத்தியாக நடந்து உலகத்தின் மதிப்பைப் பெறுமா, என்ன?

தூதுக்கோஷ்டி இம்மாதக்கடைசியில் இந்தியாவை விட்டுப் புறப்படக்கூடும். "வெள்ளையனே வெளியேறு" என்ற உலகப் பிரசித்தம் வாய்ந்த கோஷத்துக்கு எதிராக "இந்தியாவைத் துண்டம் செய்து வெளியேறுவது" என்ற கொள்கையை அனுஷ்டிக்காது, கட்டுண்டு கிடக்கும் இந்தியாவுக்கு விமோசனம் அளித்து, நாட்டுமக்களின் மனப்பூர்வமான ஆசீர்வாதத்துடனும் நன்றியுடனும் தூதுக்கோஷ்டியினர் ஊர் திரும்புவார்களாகில் அதுவே உலக சமாதானத்துக்கு முதற்படியாகும். — இ. அ.

## 235-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**பிரத்தியேக கூப்பன்களை மாற்றுதல்**

22-2-46ந் திகதியைக் கொண்ட 212-ம் இலக்கக் கட்டுப்பாட்டறிவித்தலின் சார்பாகப் பிரத்தியேக கூப்பன்களை மாற்றுவதற்கு விண்ணப்பம் 4-5-46 க்குப் பின் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதனை உபயோகிப்பவர்கள் (Consumers) கவனிக்கவேண்டும்.

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 26-4-46. [2747]

## ஸ்ரீ தேசாய்

ஸ்ரீ புலாபாய் தேசாய் அவர்களின் தேகநிலை மோசமடைந்திருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இருந்ததிலும் பார்க்க இப்போது நிலை திருப்திகரமாயில்லை.

## புதுரக அணுக்குண்டு

92,690 சதுரமைல் பிரதேசத்தை நிர் மூலமாக்கக் கூடிய சக்தி மிகுந்த பரமாணுக் குண்டுகள் இப்போது அமெரிக்க அரசாங்கத்திடம் இருப்பதாக போராசிரியர் லஸ்கி நம்புகின்ருர்.

## கு. ப. ரா. நிதி

**கு. ப. ரா.** வின் குடும்பத்துற்குப் பண உதவி வேண்டிப் பத்திரிகைகள் முயற்சி செய்ததை அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கலைமகள் ஆதரவிலும் ஒருநிதி தொடங்கப் பட்டது. திருச்சி அன்பர்களும் அபாரமுயற்சி செய்தனர். ஈழகேசரியும் தனது பங்கை உதவியது. சேர்ந்த தொகை ரூபா 7795 சொச்சமாகும்.

### நிதி வினியோகம்

**கு. ப. ரா.** நிதிச் சபையின் ஆதரவில் 16-3-46 அன்று மாலை 4 மணிக்குக் கலைமகள் காரியாலயத்தில் கூடிய கூட்டத்தில் பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

திருச்சி, கு. ப. ரா. நிதிச்சபையார் அனுப்பிய நிதியை நன்றியறிவுடன் சபை ஏற்றுக்கொள்கிறது.

இரண்டு நிதியும் கூட்டி வந்த தொகையாகிய ரூ. 7795-30 இல் முன் தீர்மானித்தபடி ரூ. 500 ஐ ஸ்ரீமதி கு. ப. சேது அம்மாளவர்களுக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கிறது.

மிகுதித் தொகையாம் ரூ. 7295 -3-0 ஐ ஏதேனும் நம்பிக்கையான பாங்கில் போட்டு மாதந்தோறும் குறிப்பிட்ட ஒரு தொகையை, கு. ப. ரா. வின் மனைவிக்கு அனுப்பச் செய்வதென்று தீர்மானிக்கிறது.

முதல் மூன்று வருஷங்கள் மாதாந்தோறும் ரூ. 75-ம் அதற்குமேல் எஞ்சிய தொகை செலவாகும் வரையில் மாதம் ரூ. 100 உம் அனுப்பும்படி ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

இது விஷயமாகச் சபையாரின் சார்பில் பொக்கிஷதார் ஸ்ரீராமரத்னம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறது.

## 232-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

சென்னையிலுள்ள ஏற்றுமதி வியாபாரக் கட்டுப்பாட்டதிகாரியின் 19-3-46ந் திகதியைக் கொண்ட அறிக்கைப் பிரகாரம் நிரந்தர கப்பலேற்றுமதியாளர் அவர்கட்குக் கொடுக்கப்பட்ட பலவினப் புடவை (Piece goods) க் கோட்டாவுக்கு தைக்கப்பட்ட ஆடைகளை வெவ்வேறு கொடுக்கும் அதிகாரிகளிடமிருந்து பெற்று ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுளார். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வோர் எங்களுடைய பலவினப் புடவை (Piece goods) க் கோட்டாவுக்கு தைக்கப்பட்ட ஆடைகளை இறக்கவேண்டாமென்று இதனு லறிவிக்கப்படுகின்றனர். அவ்வகையான இறக்குமதிகட்கு அகற்றுமுத்தரவு (Release Orders) கொடுபடமாட்டாது.

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 25-4-46 [2744]


வெளிவருகிறது!

நளவெண்பாச் சுருக்கம்

— உரையுடன் —

புதிய பதிப்பு

(ஆங்கில J.S.C. வகுப்புக்குரியது)

தனலக்ஷ்மி புத்தகசாலை
சுன்னுகம்


# நமது வாசிகசாலை

## சத்தியமூர்த்தி கடிதங்கள்

**அருமைப் புதல்விக்கு :—** ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தியின் கடிதங்கள். தமிழாக்கியவர் : ஸ்ரீ எஸ். நீலமேகம். பிரசுரம்: தமிழ்ப்பண்ணை தியாகராயநகர் சென்னை. பக்கம் : 334. விலை: ரூபா 5—0—0.

இவ்வரியநூல் திரு. எஸ். சத்தியமூர்த்தியவர்கள் அரசியல் விஷயமாகத் தண்டனைபெற்றுச் சிறையிலிருந்தகாலத்து தமது அருமைப் புதல்வியார்க்கு கடிதங்களாக எழுதிய அநேக அரிய விஷயங்களைக்கொண்டது. இந்நூல் பிரதானமாக ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். பெண்கள் அறியவேண்டிய அநேக விஷயங்கள் பொதிந்துகிடக்கின்றன. பரந்த அனுபவம் பெற்ற திரு. சத்தியமூர்த்தியவர்கள் தமது புத்திரிக்குக் கூறும் நற்புத்திகள், எல்லாப் பெண்களுக்கும் அவசியமானவை. மேல்நாட்டு நவநாகரிகங்களை மோகித்து ஓம்பாமலும், குருட்டு நம்பிக்கையுடன் பழைய கொள்கைகளை இறுகப் பிடியாமலும் தேசநலத்தை நாடி இடைமார்க்கமாகச் செல்லும் முறையையே திரு. சத்தியமூர்த்தி அநுசரித்துள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கடிதங்கள் சிறந்த தமிழில் யாவரும் இனிது வாசித்தறியும்படி இலகுவான கம்பீரநடையில் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. ஆங்கிலபதங்கள் சிற்சிலவிடங்களில் உபயோகிக்கப்படுகின்றன. அவைகட்கு ஏற்ற தமிழ்ப்பதங்கள் உளவாக, ஏன் பிறசொற்கள்கடன்பெறவேண்டும்? மேலும் ரொம்ப (நிரம்ப) நாளு (லு) நாட்கள், சொல் (ற்) பம் என்ற கிராமியச் சொற்களும் இலகுவாகத் திருத்தப்படலாம். திரு. சத்தியமூர்த்தியவர்கள் மிகப் பிரசித்தமடைந்த பேச்சாளராகவே விளங்கினர். இந்நூலை வாசித்த அளவில் இவர்வன்மை வாய்ந்த நூலாசிரியருமாவரென அறியக்கிடக்கின்றது. எல்லா வாசிகசாலைகளிலும் இல்லங்களிலும் இப்புத்தகம் இடம்பெறின் பெரு நன்மையைப் பயக்குமென்பது நிச்சயம். இவரெழுதிய அறுபத்தெட்டுக் கடிதங்களிலுள்ள அறுபத்தெட்டு விஷயங்களும் ஒன்றற்கொன்று குறைந்தனவாகா. எத்தனை முறைவாசிப்பினும் அலுப்பினைக்கொடாது இன்பத்தையே பயக்குந்தன்மையன. —கு. அ.

**பறித்த பூக்கள் :—** நாமக்கல் கவிஞர். பிரசுரம் : தமிழ்ப் பண்ணை, சென்னை. விலை அணு ஆறு.

இச்சிறு பிரதி நாமக்கல் கவிஞர் அவர்கள் எழுதிய அவளும் அவனும் என்ற காவியச் செடியிலிருந்து பறித்த பூக்கள். காதல், காமம், கற்பு, நாட்டியக்கலை, தமிழ், தமிழிசை, கவிதை, அரசியல் என்ற விஷயங்களைச் சுருங்கச் சொல்லிக் காவிய ரீதியில் விளங்க வைக்கின்றது.

**ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்** ஆசிரியர்கள் : எச். வைத்தியநாதன், வி. லக்ஷ்மணன்; பிரசுரம் : அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை; விலை : அணு 6.

கர்நாடக சங்கீதத்துக்கு மூலகாரணமானவர்—மஹா புருஷர் பிரம்ம ஸ்ரீ தியாகப்பிரம்மம். அவருடைய சரித்திரத்தைத் தமிழ் மக்கள் தெரிந்துகொள்வது அவசியம். இச்சிறு நூலில் அவருடைய புண்ணிய வாழ்க்கையை ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளலாம்.

**சினிமா :—** மாதம் ஒரு புத்தகம் பதிப்பாசிரியர் : ஏ. கே. ஜயராமன். வெளியிடுவோர்: ஜோதிநிலையம், திருவல்லிக்கேணி சென்னை. விலை : அணு எட்டு.

சினிமா சம்பந்தமான கட்டுரைகளுடனும் அழகிய வர்ணப் படங்களுடனும் இவ் வெளியீடு பட உலகிலே தோன்றியிருக்கின்றது. ஸ்ரீ ஏ. கே. ஜயராமன் தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களின் ஆதரவுடன் 'சினிமா' வை ஆரம்பித்திருக்கின்ருர். ஸ்ரீ சிதம்பர சுப்ரமணியன், ரஞ்சன், கம்பதாஸன் கே. ஸ்ரீ ஆதியோரின் எழுத்துக்கள் இப் புத்தகத்தை அலங்கரிக்கின்றன.

**கலாமோகினி :—** மாதம் இருமுறை. ஆசிரியர்: வி. ரா. ராஜகோபாலன், 5, அருண்டேல் வீதி, மயிலாப்பூர், சென்னை, ஆண்டுச் சந்தா : 6 ரூபா. தனிப்பிரதி விலை; சதம் 30.

திருச்சியிலிருந்து வெளிவந்த இவ் விலக்கிய முன்னணி சிறிது காலம் தடையுற்றது. புத்தாண்டுடன் சென்னையிலிருந்து மீண்டும் அழகாக வெளிவருகின்றது. அச்சமின்றித் தைரியத்துடன் இலக்கிய சேவைபுரியும் கலாமோகினியின் பட்டணப் பிரவேசம் தமிழுக்கும் ஆக்கம் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 234-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல்

பின்வரும் மாதிரிப் பத்திரத்தில் கொடுக்கப்பட்ட பிரகாரம் பங்கீடு படுத்தப்பட்ட புடவைகளை இறக்குமதி செய்வோர் ஒவ்வொருவரும் தங்கள் மாதாந்தக் கூப்பன் கணக்கை 1946-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி துவக்கம் கொழும்பு சாய்ப்புத் தெருவிலுள்ள (Main Street) 213-வது கட்டிடத்திலிருக்கிற புடவைப் பங்கீட்டு அலுவலக உதவிக்கட்டுப்பாட்டதிகாரி (பங்கீடு) க்கு அனுப்பவேண்டும். இந்தக் கணக்கு மாதந்தோறும், மாதத்தின் 5-ந் திகதிக்கு முன் (பங்கீட்டு) உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். பற்றுவரவுக் குறிப்புகள் மேற்படி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுவரவுக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டதாயிருக்க வேண்டும். இறக்குமதி இடாப்புகள் பற்றுவரவுக் கணக்குகள் செவ்வையாக இடப்பட்டுத் திருப்தியான முறையில் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அவை நமது அலுவலாளரின் உண்ணேக்குக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

வியாபாரியின் லைசன்ஸ் இலக்கம்:—

இறக்குமதியாளனே/ மொத்த வியாபாரியோ/ சில்லறை வியாபாரியோ

(a) மொத்தப்பற்று ... ... ... புள்ளிகள்
(b) மொத்தவரவு ... ... ... புள்ளிகள்
(c) கையிருப்பிலுள்ள மொத்த வியாபாரக் கூப்பன்
உபயோகிப்பவர்களது ... ... புள்ளிகள்
பிரத்தியேகம் ... ... ... புள்ளிகள்
கூப்பனுக் கிணையான உறுதிச் சாதனம் ... ... புள்ளிகள்
(d) கையிருப்பிலுள்ள மொத்த வியாபாரப் ... புள்ளிகள்
(e) b. c. d. மொத்தம் ... ... புள்ளிகள்
(f) a க்கும் e க்கும் உள்ள வித்தியாசம்
வித்தியாசத்துக்குக் காரணம்
நாங்கள் / நான் மேற்சொல்லப்பட்ட விபரங்கள்
சரியானவையென்று உறுதி செய்கின் (றேன்) ேரும்

திகதி : ............... ..............................
இறக்குமதியாளரின் ஒப்பம்

ஈ. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 26-4-46 [2746]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பதங்கெட்ட தோசையுந் தெளிவற்ற தமிழும் ஒரே வார்ப்பு"

# இலக்கியத்தோசை

சோனுசலம்

"இட்லிக்குந் தோசைக்கும் வந்த வினை இங்குள்ள இலக்கிய நண்பர்களுக்கெல்லாம் அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல் இருக்கின்றது," எனச் சென்னை இலக்கிய நண்பர் ஒருவர் எனக்கு எழுதியிருக்கின்றார். காலை எழுந்ததுடன் கால் முகம் கழுவி விட்டு 'சேபே' காப்பி ஹோட்டலுக்குட் புகுந்து நெய்த் தோசை கேட்டால், "சார் மசாலைத் தோசை சுடச்சுட வேண்டுமா? இட்லி கெட்டிச் சட்னி எது வேண்டுமானாலுஞ் சொல்லுங்கள்" என்று ஹோட்டற்காரப் பையன் மூச்சுவிடாமல் அடுக்கிக்கொண்டே போவான்.

"சரி முதல் நெய்த் தோசை வரட்டும்; அப்புறம் இட்லியைப் பார்த்துக்கொள்ளலாம்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டுப் பக்கத்திலுள்ள இலக்கிய நண்பர்களுடன் சர்ச்சை செய்துகொண்டே மல்லிகைப் பூப்போன்ற இட்லி முதல் 'கபேஜ்' வடை ஈறாகப் பதம் பார்ப்பது தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குக் கடவுள் கொடுத்த ஒரு பெரிய பாக்கியம். 1942-ம் ஆண்டில் ஜப்பான் போட்ட குண்டுக்குப் பயந்து ஹோட்டல்களையும் மூடிக் கட்டிக்கொண்டு சென்னையிலுள்ளவர்கள் அகேகர் முட்டை முடிச்சுடன் கிளம்பினர்கள். அந்தக் குள்ளனின் குண்டுக்குக் கூட மசியாத இட்லி தோசைக்கு, இப்போது (யுத்தம் முடிந்தபின்) சென்னையில் உள்ள ஹோட்டல்களிலிருந்து ஓட்டம் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

இலக்கியத்திலே தனிச் சுவை ஊணும் ரசிகர் கூட்டத்துக்கு இது எதிர்பாராத ஒரு இடியேதா! யுத்த கால இலக்கியம் ஒன்றைச் சமைத்துத் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் எழுத்தாளர் 'சுகி' இட்லிக்குத் தேய்பிறை என்று நயமாகப் பெயர் சூட்டினர். "ஹோட்டல் இட்லியைப் போல் இளைத்துவிட்டிருக்கிறுயே" என்று ஒரு நண்பரைக் கேட்டால் ஆள் உருத்தெரியாமல் மெலிந்துவிட்டார் என்பது அர்த்தம். இப்படித் தேய்பிறை யாகிக் கொண்டுவந்த இட்லி இப்போது முழுக்கோம்பாகிவிட்டதை நினைக்கவயிறு பற்றி எரியாதா என்ன? எழுத்தாளருக்கெல்லாம் உற்சாகம் ஊட்டி உயிரைப் பிடித்து வைத்திருக்கும் இட்லிக்கும் தோசைக்கும் வந்த விதியைக்கண்டு எழுத்தாளர்கள் சென்னையில் அவசர அவசரமாக இரண்டாவது எழுத்தாளர் மகாநாட்டைக் கூட்டினுலுங் கூட்டுவார்கள். இப்படி மீண்டும் ஓர் மகாநாடு கூடுமாகில் அங்கு செல்லும் அத்தனை பிரதிநிதிகளுக்கும் கண்டிப்பாக அரிசி இட்லி, உழுந்துத் தோசை, பொங்கல் போன்ற உணவுப் பொருட்கள் உதவ வேண்டுமென்பதை இப்போதே தெரிவிக்கின்றேன்!

**கவிதைக்கு ஜீவன்** எவ்வளவு அவசியமோ அதே போல இலக்கிய நண்பர்களுக்கு இட்லி தோசை உயிர்போன்றன. இதய பாவத்துடன் இலக்கியத்தை அனுபவிப்பதற்குச் சுவை யூட்டுஞ் சக்தி இவைக்குத்தான் உண்டு. எங்கள் ஊரில் உள்ள அப்பம் பிட்டுச் செய்து முடிக்க இயலாத வேலையை இட்லி தோசை வெற்றிகரமாகச் செய்கின்றன. இதனுலேதான் தமிழ் நாட்டில், அதிலுஞ் சென்னையில்—தமிழ் எழுத்தாளர்களும் நூற்பதிப்பகங்களும் பல்கிப் பெருகியிருக்கின்றன. உணவும் இலக்கியமும் இங்கு ஒன்ருேடொன்று பின்னியிருப்பது போல வேறு எந்த நாட்டிலுங் காணமுடியாது. இலக்கிய நண்பர்கள் ஒன்று கூடிச் சிறுகதை, நாவல், கட்டுரை நகைச்சுவை போன்ற விஷயங்களைப்பற்றி ஆராய்வதற்குக்கூட காரவகைகளும் இனிப்பு வகையருக்களும் 'டிகொக்ஷன்' காப்பியுமே தூண்டுகோலாக விருக்கின்றன. காரசாரமாகப் பேசுவதும், தேன் ஒழுகப் பொழிவதும் இதனுலா, என்ன?

**அனிச்சமலரன்ன தோசை**யைஉண்ணும்போது சுவைமிகுந்த இலக்கியத்தை அனுபவிப்பது போன்ற உணர்ச்சி எழுத்தாளர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஏற்படத்தான் செய்கின்றது.

கருகிய தோசை என்ருல் இலக்கிய வரட்சி என்ருகின்றது.

தோசை 'நைஸ்' ஆக இருக்குமாகில் அதுவே இலக்கிய மறுமலர்ச்சி.

பூரண சந்திரன்போல வட்ட வடிவமாக சுட்டெடுக்குந் தோசையிற் சங்ககால இலக்கியத்தின் கம்பீரத்தையும் தற்காலத் தமிழின் லாவண்யத்தையுங் கண்ணுற் காண்பதுடன் அனுபவித்தும் மகிழலாம்.

பதங்கெட்ட தோசையுந் தெளிவற்ற தமிழும் ஒரேவார்ப்பு.

தாளிதம் அதிகமாகிவிட்டால் அங்கும் இங்குஞ் சிதறுண்டு தோசையின் வண்ணத்தையும் வடிவத்தையும் பங்கப்படுத்திவிடுகின்றது. குப்பையுங் கூழமும் நிறைந்த இலக்கியத்துக்கு இதை ஒப்பிடலாம்.

உப்புச்சப்பற்ற தோசையும் சுவையற்ற சிறுகதையும் ஒரு தாய் பிள்ளைகள்.

வட்டவடிவமான அனிச்சமலர் போன்ற தோசையும் அதற்கேற்ற சாம்பார் சட்னியுஞ் சேருமாகில் அதுவே நிறைவான இலக்கியம். பண்பட்ட உள்ளத்தின் விளைவு. இங்கு உயிருண்டு-பாவமான உருவம் உண்டு. சுவைத்தால்... அற்புதம்! ஆனந்தம்!! அபாரம்!!!

**இத்தகைய இலக்கியப் பிர**சித்தம் வாய்ந்த தோசைக்கு மோசம்வந்ததையிட்டுத்தான் எழுத்தாளர்களும் இலக்கிய ரசிகர்களும் இன்று கண்ணீருங் கம்பலையுமாகக் காட்சி கொடுக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் இனி ரசிகமணி டி. கே. சி. அவர்கள்தான் ஆறுதல். டிகேசித் தோசையின் சுவையே தனி. இலக்கிய நண்பர்களின் புகழுக்குப் பாத்திரமானது ......" 'டி. கே. சி.வீட்டில் செய்யப்படும் தோசை தின்பதற்காகவே சென்னையிலிருந்து குற்ருலத்திற்கு ஒரு பயணம் புறப்படலாம்' என்ருர் ஒரு நண்பர். தோசை என்ருல் உங்கள் வீட்டுத் தோசை எங்கள் வீட்டுத் தோசையல்ல. தோசைக்கென்றே ஒரு தனியரிசி; குலைவாளை என்று பெயர். அதைப் பயிரிட்டு வைத்திருக்கிருர் அபரிமிதமாக. அந்த அரிசியோடு அளவான உழுந்து. அந்த அரிசி மாவையும் உழுந்து மாவையும் ஆட்டுவதற்கென்றே தனி உரல். நல்ல அகலமானது. இவ்வளவிற்கும் மேலே அந்தத் தோசைசுடுகின்ற 'கைஸ்'. ஸ்ரீமதி பிச்சம்மாள் அண்ணி ஒருவருக்குத்தான் அந்தத் தோசையைச் சுடத் தெரியும். தவசுப்பிள்ளையெல்லாம் அடுப்பங்கரையை விட்டு அந்த நேரம் ஒதுங்கிக் கொள்ளவேண்டியதுதான். அடுப்பின் முன்னுலே ஒரு 'ஸ்டூலைப்' போட்டு அதில் வீற்றிருந்து [illegible] ஒரு கலை. ஐம்பது தோசை சுட்டாலும் சரி அறுநூறு தோசை சுட்டாலும் சரி எல்லாம் ஒரே 'சைஸ்'. 'கம்பஸ்' வைத்துச் 'சர்க்கிள்' போடுபவருக்குக்கூடக் கொஞ்சம் கைபிசகும். அண்ணி சுடும் தோசை யெல்லாம் நல்ல பூரணச் சந்திரன் போன்ற வட்ட வடிவமே. இதையெல்லாம் விட தோசையின் மெதுவு. அனிச்சமலர் மிகவும் மென்மை வாய்ந்தது என்று கேள்வி. பார்த்ததில்லை என்று சொல்லலாம். அனிச்சமலர் எப்படி இருக்கும் என்ருல் டி. கே. சி. வீட்டுத் தோசையைப் போல என்று சொல்வது அனிச்சமலருக்கு ஒரு நல்ல விளக்கம் கொடுத்ததாகும். தோசையுடன் சட்னி, 'கொத்சு' பலநாளாய்ப் பக்குவமாகத் தயாரித்த ஊறுகாய் எல்லாம் சேர்ந்தால் அன்னத் துவேஷம் உள்ளவன்கூட ஐந்தாறு தோசை தின்றுவிடுவான். யாரேனும் நண்பர்களுக்கு இந்தத் தோசை தின்னும் பாக்கியம் இதுவரை கிடைக்காவிட்டால் அவர்கள் இந்த இகலோக இன்பத்தில் அடையவேண்டிய பாக்கியத்தில் ஒன்றை இன்னும் பூரணமாக அடையவில்லைஎன்றுதான் நான் சொல்வேன்."

**இத்தனையுங் கற்பனைத்** தோசையல்ல. ஆகாயத் தாமரையுமல்ல. முழுக்க முழுக்க உண்மை.

இதைக்கேட்ட குண்டம்மாள் நேற்றுக்காலை அடுக்களைக்குள்ளிருந்து தொங்கிப் பாய்ந்து வந்தாள். கோதுமை மாப்பிசைந்த கையில் இடியப்ப உரல் ஒட்டுப் பட்டுக்கொண்டு ஊசலாடியது.

"என்ன இடியப்பம் அவித்தாச்சா காரியாலயத்துக்குப் போக நேரமாச்சே" என்றேன்.

"இடியப்பமுஞ் சொதியும்... இந்த அமெரிக்கன் மாவோடு நான் இழுபடுகிறபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. திருக்குற்ருலம் செல்லலாம் சீக்கிரம் புறப்படுமென்ருள்" மனைவி.




<u>விஞ்ஞானத்தின்பரப்பு</u>

# காந்தம்

II

கே. எஸ். கிருஷ்ணன்

**இரும்பு காந்த உலோகங்**களில் சிறந்ததென்றும், செயற்கை முறையாலும் மின்சார முறையாலும் அதில் காந்த சக்தியை ஏறச் செய்யலாமென்றும் எங்களுக்குத் தெரியும். செயற்கை முறையாவது, காந்தக் கல்லினுலாவது அல்லது வேருெரு நிலைக்காந்தத்தினுலாவது இரும்பைக் காந்தமாக்குதல். மின்சார முறையாவது வரிச்சுற்றின் உதவியால் காந்தமாக்குதல்.

எந்த முறையைக் கையாண்டபோதிலும் இரும்பு இரண்டு வகையாகக் காந்த சக்தியைப் பெறவியலும். அவை இசைம்பு (Conduction) கிளர்வு (Induction) எனப்படும். காந்தக்கல்லினுலாவது, சட்டக் காந்தத்தினுலாவது இரும்பைத் தேய்த்தோமாயின் இரும்பு காந்தமாகிறது. இது இசைப்பு. இனிக் கிளர்வு என்னவென்று பார்ப்போம். காந்தத்தை ஓர் இரும்புத் துண்டுக்கு அருகில் கொண்டுவந்த உடன் இரும்பு இழுபடுகிறது. ஏனெனில், இரும்பு காந்த சக்தியைப் பெறுகிறது. ஒவ்வாமுனைகளுக்கிடையில் கவற்சியேற்படும் அல்லவா? ஆதலால் காந்தத்தின் தென்முனை இரும்புத்துண்டருகில் வந்தது என்ருல், தென்முனைக்கு அண்மையிலிருக்கும் இரும்பினது ஓரத்தில் வடமுனை ஏற்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்டாற்ருன் கவர்ச்சியேற்படும். இரும்பின் சேய்மைப் பாகத்தில் தென்முனை ஏற்படுகிறது. அதே போல் காந்தத்தின் வடமுனையை இரும்புத்துண்டருகில் கொண்டுவந்தால், இரும்பின் அண்மையோரத்தில் தென்முனையும், சேய்மையோரத்தில் வடமுனையும் ஏற்படும். இதைத் தான் காந்தக் கிளர்வு (magnetic induction or induced magnetism) என்கிருேம்.

சரி. கிளர்வினுல் காந்த சக்தி ஏறியிருக்கிறதென்று எவ்வாறு அறியலாம்? அதுதான் சுலபமாய் அறியலாமே! காந்தம் இரும்பினருகில் இருக்கும்வரை, இரும்பு வேறு இரும்புத்துண்டுகளை இழுக்கும் வல்லமையுடையதாய் இருக்கிறது. காந்தத்தைத் தூர எடுத்தவுடன் இரும்பு ஆகர்ஷண சக்தியை இழந்து பழையபடி இரும்பாய் விடுகிறது!

மின்சாரத்தினுல் இரும்பில் காந்தம் ஏறும் பொழுதும் இந்த இசைப்பு, கிளர்வு வழிகள் உண்டா? ஏன் இல்லை! வரிச்சுற்றில் மின்சாரம் பாயும்போது, அவ்வரிச் சுற்றினுல் பொதியப்பட்டுள்ள இரும்பு காந்தமாகிறது. இது இசைப்பு.

இனி மின்சாரத்தினுல் காந்தக்கிளர்வு எவ்வாறு ஏற்படுகின்றதென்று பார்ப்போம். வரிச்சுற்றில் மின்சாரம் பாயும்போது வரிச்சுற்றே காந்தம் போல் ஆகிவிடுகிறது. காந்தத்துவம் பெற்ற வரிச்சுற்று இரும்பை இழுக்குமல்லவா? ஆதலால் இரும்பு கிளர்வு முறையால் காந்த சக்தியை வரிச்சுற்றினின்றும் பெறுகிறது.

இப்போது கிளர்வு என்ருல் என்ன, இசைப்பு என்ருல் என்னவென்பது ஒருவாறு தெளிவாயிற்று. ஆனுல் ஒரு சந்தேகம்! மின்சாரம் பாயும் வரிச்சுற்று, இரும்பினுல் ஆனதாக இருக்க வேணுமா? அல்லது செம்பு முதலிய காந்த உலோகமல்லாததால் செய்யப்பட்டிருப்பினும், வரிச்சுற்றில் காந்த சக்தி தோன்றுமா? மிக நல்ல கேள்வி! வரிச்சுற்று காந்தமாக இயங்குதல் உலோகத்தினுல் இல்லை. அதில் பாயும் மின்சாரத்தினுலே தான். வரிச்சுற்று எந்த உலோகத்தாலும் ஆக்கப்பட்டிருக்கலாம். அதில் மின்சாரம் பாயும்போது அது காந்த சக்தியைப் பெறும். ஜில்பர்ட் காந்தசக்திக்கும் மின்சக்திக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென அனுமானித்தாரல்லவா? அதைப் பரிசீலனை செய்த ஓர்ஸடட் என்ற விஞ்ஞானிதான், மின்சாரம் பாயும் எந்த உலோகத்தைக் சுற்றிலும் காந்தமண்டலம் ஏற்படுகின்றது என்று கண்டார்.

**காந்த மண்டலம்**

**அப்படியானுல்,** சாதாரணக் காந்தச் சலாகையைச் சூழக் காந்தமண்டலம் (magnetic field) உண்டுதானே? ஏது! நல்ல நல்ல கேள்வியாக வருகிறதே! சட்டக் காந்தத்திலும் சரி, வளைவுக் காந்தத்திலும் சரி; அதைச் சூழக் காந்த மண்டலம் உண்டு. அவ்வாருயின் காந்த மண்டலத்தை எவ்வாறு அறியலாம்? காந்தச் சலாகையை ஒரு கடுதாசியின்மேல் வைக்கவேண்டும். இரும்புத் தூளைக் காந்தத்தின் எல்லாப் புறங்களிலும் காகிதத்தில் சிதறி, விரலினுல் காகிதத்தைச் சுண்டவேண்டும். அப்போது இரும்புத் தூள் எல்லாம் நிரை நிரையாக அமைந்துவிடும். இரும்புத் தூள் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு இவ்வாறு அமைந்திருக்கிறதோ அவ்வளவுக்குக் காந்த மண்டலம் வியாபித்திருக்கிறது என்று அறியலாம் அல்லவா?

**மூலக்கூறுகளும் காந்தசக்தியும்**

**அப்படியென்ருல்,** காந்த மண்டலத்திற்குள் அகப்பட்ட ஒவ்வொரு சிறு இரும்புத்தூளும் ஒவ்வொரு சிறு காந்தமாகத் தானே ஆகிவிடுகிறது? காந்தமாகத்தான் மாறிவிடுகிறது. இரும்பில் காந்த சக்தியையேற்றுதல் என்பது என்னவென்று இப்போது விளக்கும். இரும்புத் துண்டு பல மூலக்கூறுகளால் ஆனது. அம் மூலக் கூறுகள்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# கௌரி

சோ. ஆனந்தராஜன்

வஸந்த காலம். ஓடையின் அருகிலிருந்த கல்லின் மேல் உட்கார்ந்து, காலத்தின் சோபையைப் பார்த்து மகிழ்ந்தேன். சுற்றிலுமுள்ள வானளாவிய விருட்சங்கள் அந்த ஓடைக்குத் தனியழகைக் கொடுத்தன. காலைக் கதிரவனும் தன் கிரணங்களை ஓடையின்மீது வீசினான். அவைகளை உபசரிப்பது போன்று ஓடையிலுள்ள மீன்களும் துள்ளிவிளையாடின. மரங்களிடையே இளந்தென்றல் மெல்லெனப் புகுந்து அன்புடன் என்னை அணைத்தது. மரங்களிலிருந்து விழும் புஷ்பங்கள், ஓடையில் மெல்ல மிதந்து நீர்க்குமிழிகளுடன் மோதுண்டன.

* * *

ஐந்து வருஷங்களின் முன்பு நான் கல்லூரி மாணவனாயிருந்தேன். கல்வியில் சிரத்தையுடையவனாக இருந்தபோதிலும், பள்ளிக்கூடத்து மாணவருடன் அதிகம் பழகி வந்தேன். அவர்களுக்கு என்னுடன் பேசும்பொழுது, அளவிலாத இன்பம். நாங்கள் நேரம் வாய்த்த போதெல்லாம் 'காதலை'ப்பற்றியே பேசுவோம். காதலாவது கத்தரிக்காயாவது என்று சொன்னவர்களில நானுமொருவன்தான்.

ஒருநாள், கடற்கரையோரமாக உலாவச் சென்றேன். சூரியன் மறையும் சமயம் அடிவானம் செக்கச் சிவந்திருந்தது. சூரியனும் மெதுவாகச் சமுத்திரத்துக்குள் மறைந்துவிட்டான். பூரண சந்திரன் கடற்கரையிலுள்ள மணல் திடர்கள் மீது வெள்ளிமயமாக்கியது. இயற்கையின் அழகில் ஈடுபட்ட நானும் மணலில் உட்கார்ந்து, கடலை நோக்கியவண்ணமிருந்தேன்.

பக்கத்திற் பெண்களுங் குழந்தைகளும் விளையாடிக்கொண்டிருந்தனர். இயற்கை அழகில் என்னைப் பறிகொடுத்ததால், அவர்களின் விளையாட்டைக் கவனிக்க முடியவில்லை. 'க்ளுக்' என்று ஒரு பெண் சிரிக்கும் சத்தம் கேட்டுப் பின்புறம் திரும்பினேன். வனதேவதை போல் நின்றாள் ஒரு கன்னி. அவளது மேனி வசந்தத்தின் புதுத்தளிர்களை ஒத்திருந்தது. அவளது அழகில் மயங்கியிருந்த என்னைப்பார்த்து, ஏளனஞ் செய்வதுபோல் புன்னகை அவள் வதனத்திஸ் அரும்பியது. அவளது கண்கள் என் கணகளுடன், ஏதோ ஒரு விளங்காத பாஷையில் பேசிக்கொண்டன. ஆனால் அது நீடிக்கவில்லை.

அன்று கடற்கரையில் என் மனதைக் கவர்ந்த கட்டழகி கௌரி இன்று என் ஆருயிர்க் காதலி. அவள் தந்தை தாயற்ற ஒரு அனாதை. தன் பாட்டியுடனும், தமையனுடனும் வாழ்ந்து வந்தாள். அவர்கள் தங்கள் நிலங்களிலிருந்து வரும் ஊதியத்தைக் கொண்டே காலங் கழித்து வந்தனர். எவ்விதக் கஷ்ட திசையிலிருந்த போதினும் கௌரி படித்த பெண்ணாகவே இருந்தாள்.

இதே ஓடையினருகில், இக் கல்லில் இருவரும் உட்கார்ந்து மனக்கோட்டைகள் கட்டுவோம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையை எண்ணி குதூகலிப்போம். இந்தக் காதல் வாழ்க்கை நீடித்திருக்குமென எண்ணி மகிழ்ந்தோம். ஆனால் காலதேவனின் கொடிய கரங்கள் எங்களைச் சும்மா விடவில்லை.

எக் காரணத்தை யிட்டோ என் தந்தை, காசி சர்வகலாசாலைக்குப் போகும்படி என்னைக் கேட்டார். நானும் தந்தையின் சொல்லைத் தட்டமுடியாமல் ஒப்புக்கொண்டேன். அன்று இதே ஓடை. நான் கௌரியைக் கடைசியாகச்சந்தித்தேன். என் முகத்தில் துன்பரேகை படர்ந்திருந்ததைக் கண்டுகொண்டாள் கௌரி. நானும் அவள் மனத்திலெழுந்த சந்தேகப் புயலை அடக்கும் பொருட்டு, தந்தை எனக்கிட்ட கட்டளையை அவளிடம் சொன்னேன். அவள் முகத்தில் முன்னிருந்த இன்பக் குறி மாறி, துன்பக் குறி தென்பட்டது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பாயத் தொடங்கியது. அவள் வதனத்தில் முன்னிருந்த இளமுறுவல் எங்கோ மறைந்துவிட்டது. நான் அவளுக்குச் சமாதனம் சொல்லித் தேற்றினேன். கௌரியின் பரிசுத்தமான காதலே எனக்குத் தைரியமளித்தது. "இந்த ஏழையை மறக்கவேண்டாம். என்னை நீர் மணக்காவிட்டால் நான் எவனுக்கோ அடிமையாவது நிச்சயம். ஆனல் என் வாழ்க்கை சோபையற்றதாயிருக்கும்" என்று கௌரி கூறியது இன்றும் என் உள்ளத்தைத் தாக்கியபடியே இருக்கிறது.

* * *

படிப்பை ஒருவாறு முடித்துக்கொண்டு என்னூரை அடைந்தேன். என் மனம் எண்ணாத எண்ணங்கள் எண்ணின. கௌரியைக் காணும் காலத்தை எதிர்பார்த்தேன். அன்று அந்திவேளையில் காற்றுவாங்கும் பொருட்டு, கடற்கரைக்குப் போனேன். என் மனம் கௌரியின் நினைப்பில் மூழ்கிப்போயிருந்தது. அப்பொழுது 'மனோகரா' என்று கூப்பிடும் ஒரு பெண்ணின் குரல் என் உள்ளத்தில் பாய்ந்தது. இவ்வளவு காலமும் எந்தக் குரலைக் கேட்க வேண்டுமென்று இருந்தேனோ அதை இன்று கேட்டேன். என் பெயரைக் கூறிஅழைக்கும் பெண், கௌரியை விட வேறு யார்? வியப்புடன் திரும்பினேன். தூரத்தில் ஒரு குழந்தை விழுவதும் எழுவதுமாக என்னிடம் ஓடிவந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து அதன் தாய் வந்துகொண்டிருந்தாள். 'அமமா' என்று கூறியபடியே என் முன் நின்றது அக்குழந்தை. குழந்தையின் மதலை விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்த நான் அதன் தாயைப் பார்க்க நேர்ந்தது. என்ன? என் முன் கௌரியே நின்றுகொண்டிருந்தாள். மனத்தில் நிலவிய அமைதி சூறுவளியாக மாறியது. எல்லாம் உணர்ந்துகொண்டேன் இரண்டு வருஷங்களின் முன்பு நவநாகரீக அலங்காரங்களுடன் திகழ்ந்த கௌரிக்கும் இன்றைய கௌரிக்கும் எவ்வளவு வித்தியாசம்?

'கௌரி' என்று என்னையறியாமல் வாய்விட்டுக் கூப்பிட்டேன். "என்னை மன்னியுங்கள்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினாள் கௌரி. இதே இடத்தில் அன்று என் உள்ளத்தைக் கவர்ந்த வனதேவதையை, இன்று என் முன் வாடிய வதனத்துடன் நிற்கும் பத்தினியுடன் ஒப்பிட்டேன். கௌரியை ஏற இறங்கப் பார்த்தேன். அன்று அவள் கூறியதுமுற்றிலும் உண்மையாகவே இருந்தது. அன்று என் காதலின் சொரூபமாக விளங்கிய கௌரி இன்று என் சோகத்தின் சிகரமாகக் காட்சியளித்தாள். அவளின் கண்களில் நீர் வடிந்துகொண்டேயிருந்தது. பெண் இதயம் மலரல்லவா? வாடத்தானே செய்யும்.

* * *

இருட்டுக்கட்டிவிடடது. என் மனத்தில் விதியின் சூறுவளி அடித்துக்கொண்டிருந்தது. என் வீட்டு மேல்மாடியிலிருந்து என் [illegible] பெற்றோர்கள் [illegible] கொண்டிருந்தார்கள்.

"என் சூழ்ச்சியினாலன்றோ, மனோகரன் கௌரியை இழக்க நேரிட்டது". இது என் தந்தையின் குரல்.

"பாவம், அந்த ஏழைப் பெண்ணின் எண்ணங்கள்" இது என் தாயின் குரல். மீண்டும் இதை என் காதுகள் கேட்க மறுத்தன.

ஆ! என் தந்தையே எனக்கு விரோதி. காதலை உணராத பேதை. மலரினும் மெல்லிய காதலைப் பறித்துக் கசக்கி எறிந்தாரே என் தந்தை. காதல் உயிரோடு இணைக்கப்பட்டிருப்பதை அவர் அறியவில்லை. என் வாழ்க்கையின் இன்பத்தைப் பாழாக்கிய இவர்களின் எண்ணங்களைச் சிதற அடிக்கிறேன். எனது இளமையின் இன்பத்தைப் பரித்தியாகம் செய்தேன், நான் நித்திய பிரமச்சாரி. என் வாழ்க்கை சந்திரனற்ற வானம் போலாயிற்று.

* * *

கோகிலங்களின் கானம், என் சிந்தனையைக் கலைத்தன. சூரியனும் மேல் வானில் பிரகாசிக்கிறான். இப்படியெல்லாம் யோசித்துவிட்டேனே என்று நினைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடு

பாலபோதினி

சிறந்த பாட புத்தகங்கள்

சாதி-சமய வேறுபாடு நோக்காது, பிள்ளைகளின் உள வளர்ச்சியையும் கல்வித் தேர்ச்சியையுமே முக்கிய இலக்காகக் கொண்டு, அறிஞர் பலரால் எழுதப்பட்ட பாடங்கள் இவற்றில் உரிய முறையிலே தொகுக்கப்பட்டுள்ளன,

போதனுமுறை வல்லுநர் பலராற் பரிசோதிக்கப்பட்டு வெளியிடப் பெற்றவை.

அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றவை.

| | | | |
|---|---|---|---|
| அரிவரிப் | புத்தகம் | — — | 30 சதம் |
| முதற் | ,, | — — | 35 ,, |
| இரண்டாம் | ,, | — — | 50 ,, |
| மூன்றும் | ,, | — — | 60 ,, |
| நான்காம் | ,, | — — | 65 ,, |
| ஐந்தாம் | ,, | — — | 75 ,, |
| ஆறும் | ,, | — — | அச்சில் |
| ஏழாம் | ,, | — — | ,, |

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தனலக்குமி புத்தகசாலை

சுன்னுகம்

## காந்தம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரையாக இல்லாமல் பல படியாகச் சிதறுண்டு இருக்கும். இகைப்பினுலோ, அல்லது கிளர்வினுலோ இரும்பு காந்தத்துவம் பெறும்போது அம்மூலக்கூறுகள் நிரை நிரையாக அணிவகுத்தாற்போல் அமைந்து விடுகின்றன. இரும்பின் மூலக்கூறுகளை ஒரே மாதிரியாக (Pattern) ஒழுங்குபடுத்துதல்தான் இரும்பைக் காந்தமாக்குதல் என்று அறியக்கிடக்கின்றது அல்லவா?

அவ்வாருயின், 'நிலையாக்காந்தம்' காந்தசக்தியை இழந்து விடுவதற்குக் காரணம், அதிலுள்ள மூலக்கூறுகள் விரைவில் நிரை குலைவதுதான் போலும். மிகவும் சரி! ஆனல் எஃகின் மூலக்கூறுகள் அவ்வாறு விரைவில் நிரை குலையக்கூடியவை இல்லையாதலால் அது நிலைக் காந்தமாக இருக்கிறது.

மேலும், இக்கொள்கையின்படி இரும்பிலுள்ள மூலக்கூறுகள் யாவும் ஒரேமாதிரியாக ஒழுங்கு செய்யப்பட்டவுடன், மேலதிகமாக ஒன்றும் செய்யவியலாததால், இரும்பில் காந்தமேற்றுவதற்கு ஓர் எல்லையுண்டு என்று முன்னர்சொல்லப்பட்டது.

இரும்புச் சலாகையைத் தரையில் தெற்கு வடக்காக வைத்துச் சம்மட்டியாலடித்தால், அது காந்தமாகிறதற்குக் காரணம் யாதெனில், இரும்பின் மூலக்கூறுகள் சம்மட்டியின் தாக்குதலால் அதிர்ச்சி யடையும்போது பூமியின் காந்தசக்தி அம் மூலக்கூறுகளை நிரைப்படுத்தி விடுகிறது. அதனுல் இரும்பு காந்தமாகின்றது.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## இக்கிழமை உணவுப் பொருட்களின் விநியோகம்

29-4-46 தொடங்கும் கிழமைக்குக் கொடுக்கப்படவேண்டிய அரிசியும் மாவும் மொத்த வியாபாரிகளுக்கு இன்று கொடுக்க ஆரம்பமாகி விட்டது. இவற்றை சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்து புதன்கிழமையளவில் பெற்றுக்கொள்ள வேண்டும். பொதுஜனங்கள் வியாழக்கிழமையளவில் இக்கிழமைக்குரிய தங்கள் அரிசியையும் மாவையும் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

ம. ஸ்ரீகந்தா
யாழ்ப்பாணம், உபஉணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக
கச்சேரி, யாழ்ப்பாணம்
29-4-46. [2742]

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

இரும்பு கம்பிகள் கேடர்கள் சிலாகைகள் அச்சுகள் தகடுகள்

நீர் இறைக்கும் யந்திரங்கள் குழாய்கள் தாங்கிகள்

கல்வனைஸ் தகடுகள் தாங்கிகள் வாளிகள்

கைத்தொழிற்குரிய ஆயுதங்கள் மற்றும் கமத்தொழிற் கருவிகளும்

பித்தளை தகடுகள் பூட்டுகள் பிணைச்சல்கள்

மைவகைகள் மை எண்ணெய் வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பேனி லிமிரெட்
ஆஸ்பத்திரிரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62
2740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ப்பயிர்
செய்வோர்க்கு — ஓர்
விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு
## கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக
எல்லாப் பயிர்களுக்கும்
வேண்டிய பசளைவகைகளை
விநியோகஞ் செய்பவர்களாக
இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு
அவசியமான பசளைகளைப்பற்றி
விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப்
பசளைக் கலப்புகளை
உபயோகிப்பதாலேயே
சிறந்த செழிப்பையும்
மிக உயர்ந்தலாபத்தையும்
— பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை
இலவசமாகக் கூறப்
படும். எங்கள் விசேஷ
விற்பனை ஒழுங்கு
களைப்பற்றிய விபரங்
களுக்கு உடனே
எழுதவும்

## கொழும்பு
## கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

## COLOMBO COMMERCIAL CO., LTD.

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2748]



NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest Circulation in Ceylon India & Malay States

Vol. 16 | Chunnakam, Sunday May, 5, 1946 | No. 39


### திருமணம்

**சுப்பிரமணியம்— பாஞ்சாலிதேவி**

யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் B. Sc. அவர்களுக்கும் செல்வி செல்லையா பாஞ்சாலிதேவிக்கும் கோண்டாவிலுள்ள மணமகள் இல்லத்தில் ஏப்பிரல் மாதம் 22-ந் தேதி திங்கட்கிழமை காலை திருமணம் நிறைவேறியது. தம்பதிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

### வலிகாமம் கிழக்குப் பகுதித் தமிழாசிரியர் விடுமுறைக் கழகம்

மேற்படி கழகமானது மேற்படி ஆசிரியசங்க ஆதரவில் அப்பகுதி வித்தியாதரிசி ஸ்ரீ E. அருளம்பலம் அவர்களின் பேருக்கத்தினல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் 25, 26, 27-4-46 ஆகிய 3 நாட்களும்கொண்டாடப்பட்டது.

முதலாம்நாள் முற்பகல் திரு. V. K. நாதன் தலைமை தாங்கினர். திரு. A. V. மயில்வாகனம் (வித்தியாதரிசி புத்தளம்) திரு. S. அம்பிகைபாகன் ஆதியோர் விரிவுரைகள் ஆற்றினர். பிற்பகல் திரு. க. கிருஷ்ண பிள்ளையவர்கள் தலைமையில் திரு. V. A. யோன்பிள்ளை பேசினர்கள்.

இரண்டாம் நாள்முதல் திரு. K. S. அருள்நந்தி அவர்கள் தலைவராயமர்ந்தனர். பண்டிதர் S. ஆனந்தர், திரு. S. குலரத்தினம், திரு. S. வீரசிங்கம் ஆதியோர் சொற்பொழிவுநிகழ்த்தினர்.

மூன்றும் நாள் திரு. S. நடேசன் அவர்கள் தலைமை வகித்தார். திரு. S. H. பேரின்பநாயகம் (நியாயவாதி கொழும்பு) அவர்களும் பண்டிதர் ம. வே. திரு. ஞானசம்பந்தபிள்ளை அவர்களும் பேசினர். பிற்பகல் திரு S. இராசரத்தினம் (காரியஸ்தர் H. B. E. நியாயவாதி) அவர்கள் தலைமையில் திரு. M. பாலசுந்தரம் (நியாயவாதி யாழ்ப்பாணம்) அவர்கள் விரிவுரை நிகழ்த்தினர்.

### இலங்கைத் தமிழர் கலாவிருத்திச்சங்கம் குவாலாலம்பூர்

இம்பிரேட்டில் அமைந்திருக்கும் மேற்படி சங்க மண்டபத்தில் ஏப்பிரல்மீ 13ந்உ சனிக்கிழமை மாலை 5 மணியளவில் விய வருடக் கொண்டாட்ட வைபவங்கள் ஆரம்பமாயின. அத்தருணத்தில் ஸ்ரீமான் T. சிவப்பிரகாசம் (Indian Co-operative Officer, Kt.) அவர்களாலும், ப்ரமஸ்ரீ A. இராமானுஜாச்சாரி (Visting Teacher Indian Schools, Kt.) அவர்களாலும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

பின்பு சங்கத்தால் பரிபாலிக்கப்படும் இம்பிரேட் தமிழ்ப்பாடசாலையின் மாணவிகளால் பல காட்சிகள் நடிக்கப்பெற்றன.

மாணவ மாணவிகளால் நிகழ்த்திய கோலாட்டம், கும்மி, நவாணம், ஸ்ரீ கிருஷ்ணபகவானின் இயல்பானதும், மாயாவிநோதமுமான பாவனைகளை விளக்கும் நடனங்கள் மிகத் திறமையாகக் காணப்பட்டன. நடிகர்களின் பயிற்சியில் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் வே. கதிரேசு அவர்களும், உதவி ஆசிரியர்களும் அதிக ஊக்கங் காட்டியுள்ளார்கள். முடிவில் சங்கத்தலைவர் ஸ்ரீமான் M. கனகசபை (Medical Dept. Malaya Union) அவர்களால் சபையோருக்கும், தலைமை ஆசிரியருக்கும், சொற்பொழிவாளர்கட்கும் நன்றிகூறப்பட்டன. கடிதம்


# நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R.
சந்தனாதித் தைல
வகைகளும் விற்
பனைக் கிருக்கின்றன.

[2741]


### கொழும்பு இசைக்கலை மன்றம்
#### திருப்புகழ் வகுப்பு ஆரம்பவிழா

வெள்ளவத்தை இசைக்கல்லூரியின் ஓர் அங்கமாக நடைபெறவிருக்கும் திருப்புகழ் வகுப்பினைத் திருவாங்கூர் நீதியரசர் 'திருப்புகழ் மணி' ராஜீய சேவப்ரவீண T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் சென்ற சனிக்கிழமை மாலை 27-4.46 ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்கள்.

முதலில் இசைக்கல்லூரி மாணவிகள் வரவேற்புப் பாக்கள் பாடினர்கள். பின்னர் மன்றத்துக் காரியதரிசி, திரு. குல. சபாநாதன் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்துவைக்குமாறு திருப்புகழ்மணியவர்களை வேண்டிக்கொண்டபொழுது, "இசைக்கல்லூரியில் ஓர் அங்கமாக தேவார திருவாசக திருப்புகழ் வகுப்புக்கள் நடத்தப் பலகாலமாக எங்கள் தலைவர் திரு. கனகரத்தினம் அவர்கள் இயன்று வருகின்றார்" என்றும், "இசைக்கல்லூரியைத் திறந்து வைக்குமாறு எங்கள் தலைவர் கேட்ட திருப்புகழ்மணியவர்களை இப்பொழுது இத் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்து வைக்க நேர்ந்தது கதிர்காமவேலன் திருவருளேயாகும். அது எங்கள் பாக்கியமுமாகும்" என்றும் குறிப்பிட்டார்கள்.

திருப்புகழ் மணியவர்கள் இன்னிசையுடன் திருப்புகழ் வகுப்பினை ஆரம்பித்து வைத்தார்கள். பின்னர் ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் இரண்டு நாட்களாகப் பயிற்றிய எட்டுச் சிறுமிகள், தெரிந்தெடுத்த திருப்புகழ்ப் பாக்களை இன்னிசையொடு பாடிச் சபையினரை மகிழ்வித்தார்கள். இவர்கள் பாடியதும், "இந்த அஷ்டலட்சுமிகளுடன் ஆரம்பமான இவ்வகுப்பு இலங்கையில் திருப்புகழைப் பரவச்செய்ய உதவி புரியுமென்றும், ஒவ்வொரு தெருவிலும் திருப்புகழ் வகுப்பு நடைபெற வேண்டுமென்றும் திருப்புகழ்மணியவர்கள் கூறினர்கள்.

### வலிகாமம் கிழக்குப் பகுதித் தமிழாசிரிய சங்க வருடாந்தக் கூட்டம்

மேற்படி கூட்டமானது 27-4-46 சனிக்கிழமை பிற்பகல் நாலுமணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிமண்டபத்தில் வித்தியாதரிசி திரு. E. அருளம்பலம் அவர்கள்தலைமையில் ஆரம்பமானது. காரியதரிசியால் சென்ற கூட்ட வரலாறும் வருடாந்த அறிக்கையும் வாசிக்கப்பட்டபின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 மேமீ 5உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org